நினைவுகள்
எண்ணங்கள்
நிச்சயமாய் அமைந்துவிடில்
நினைவுகள் மறப்பதில்லை

கஜபதி
(வெளிப்புற படப்பிடிப்பு)
[29861]

பக்கங்கள் ஆறு

Registered as a Newspaper

உதயன்

விலை ரூபா 5-00

நிஜங்கள் நிழலாக
நினைவுகள் மறப்பதில்லை

கஜபதி
(வெளிப்புற படப்பிடிப்பு)
இல. 59, அரசடி வீதி,
தட்டாதெருச் சந்தி,
யாழ்ப்பாணம்.
[29861]

சுடர்: 9. திருவள்ளுவர் ஆண்டு 2025 பங்குனி 04 வியாழக்கிழமை (17 - 03 - 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 110

# போர் நிறுத்தம் செய்யுமாறு அரசுக்கு
# ஐ.நா. அழுத்தம் கொடுக்க வேண்டும்

## மனித உரிமை ஆணைக்குழு கூட்டத் தொடரில் கோரிக்கை

ஜெனிவா, மார்ச் 17

இலங்கையின் வடக்கு - கிழக்கில் நடந்து வரும் போரை நிறுத்துமாறு ஸ்ரீலங்கா அரசாங்கத்தை ஐ. நா. மனித உரிமைகள் ஆணைக்குழு வலியுறுத்தவேண்டும்; அழுத்தம் கொடுக்கவேண்டும்.

இவ்வாறு ஜெனிவாவில் தொடர்ந்து நடைபெற்று வரும் ஐ. நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஐம்பதாவது கூட்டத் தொடரின்போது கோரிக்கை விடப்பட்டுள்ளது.

"மனிதாபிமான சட்ட அமைப்பு" என்ற அரச சார்பற்ற நிறுவனம் கூட்டத் தொடரில் விடுத்த அறிக்கையில் இந்தக் கோரிக்கையும் அடங்கியுள்ளது.

போரை நிறுத்த விடுதலைப் புலிகளிடமும் வலியுறுத்த வேண்டும் எனவும் அந்த அறிக்கையில் கோரப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:-

★ தமிழர் தாயகத்தில் சகல வகையான குண்டு வீச்சுக்களும் நிறுத்தப்பட வேண்டும்.

★ வடபகுதி மீது அரசால் விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடை உடனடியாக நீக்கப்பட வேண்டும்.

★ சர்வதேச மத்தியஸ்தத்துக்கு இணங்க வேண்டும். என்று இலங்கை அரசையும், விடுதலைப் புலிகளையும் கோர வேண்டும்.

★ அத்தகைய சர்வதேச மத்தியஸ்தம் மூலமான தீர்வு இலங்கையின் வடக்கு - கிழக்கில் தமிழர் தாயகத்தின் ஒருமைப்பாட்டை மதிப்பதாக அமைய வேண்டும். அத்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மீன்பிடிப் படகுகளின் என்ஜின்கள் அபகரிப்பு

### திருமலைப் பகுதியில் சம்பவம்

கொழும்பு, மார்ச் 17

சிங்கள மீனவர்களுக்குச் சொந்தமான மூன்று மீன்பிடிப் படகுகளில் இருந்து என்ஜின்கள், மற்றும் பெறுமதியான பொருள்கள் இனந்தெரியாத நபர்களினால் அபகரித்துச் செல்லப்பட்டன.

திருகோணமலை மாவட்டம் — சல்லிக் கிராமத்தை அடுத்துள்ள கடற்பகுதியில் நேற்று முன்தினம் இரவு இச்சம்பவம் இடம்பெற்றது.

கொள்ளையிட்டோர்கள் கடற்படையினரின் சீருடையில் காணப்பட்டனர் என்றும் —

கரையில் இருந்து ஐந்து மைல் தொலைவில் கடல் பிரதேசத்தில் இக் கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அப்படகுகளில் இருந்த எரிபொருள், மின் உபகரணங்கள், சுமார் 200 கிலோ மீன் ஆகியவற்றின் பெறுமதி ஒன்றே காலட்சம் ரூபாவுக்கு சற்று அதிகமானதாகும் என்று சொல்லப்படுகிறது.

இயந்திரங்கள் இல்லாத நிலையில் மீனவர் தங்கள் படகுகளை மிகுந்த கஷ்டத்துடன் கரைக்குக் கொண்டு வந்து சேர்த்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

(இ-எ--6)

## கதிரமலை கடற்பகுதியில் 5 மீனவர் கொலையுண்டனர்

புத்தளம், மன்னார் மாவட்டங்களின் எல்லைக்கு அப்பால் உள்ள கதிரமலை பிரதேசத்தை அடுத்துள்ள கடலில் நேற்று அதிகாலை இனந்தெரியாதோரால் 5 மீனவர்கள் கொல்லப்பட்டனர் என்றும்—

அவர்களது படகுகள் மூழ்கடிக்கப்பட்டதாகவும் ஸ்ரீலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (த)

## யாழ். பல்கலை மாணவர் நாளை வகுப்பு பகிஷ்கரிப்பு

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் நாளை (வெள்ளிக்கிழமை தமது விரிவுரைகளைப் பகிஷ்கரிக்கத் தீர்மானித்துள்ளனர்.

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் மகாபொல உதவிப் பணக் கொடுப்பனவுகளை இரட்டிப்பாக்குவதாக கூறிய உறுதி மொழியை அமுல்படுத்த தவறியமை, மற்றும்—

மருத்துவ பீட மாணவர்களின் கல்விக் காலம் முடியும் வரை மகாபொல கொடுப்பனவுகளை வழங்குதல் —

மகாபொல கொடுப்பனவு பெறத் தகுதியான மாணவரது பெற்றோரின் வருடாந்த வருமானத்தை 48 ஆயிரம் ரூபாவிலிருந்து 84 ஆயிரம் ரூபாவாக அதிகரித்தல் — ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால் அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் கடந்த வாரம் சுவரொட்டிப் பிரசாரம், சத்தியாக்கிரகம் ஆகியவை நடத்தப்பட்டன.

இதற்கு ஆதரவு தெரிவிக்கும் முகமாகவே யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் நாளை வகுப்புகளை பகிஷ்கரிக்க உள்ளனர். (த)

## வல்வெட்டியில் ஷெல் வீச்சு

யாழ்ப்பாணம், மார்ச் 17

வல்வெட்டியில் கடந்த செவ்வாய் இரவு 11.15 மணியளவில் இடம்பெற்ற ஷெல் தாக்குதலில் கோவில் ஒன்றும் சில வீடுகளும் சேதம் அடைந்தன.

வல்வெட்டி வேநில் சித்தி விநாயகர் கோவிலே சேதம் அடைந்த கோவில் ஆகும்.

இக்கோவிலின் நிலைக்கதவு ஒடுகள் ஷெல்லினால் சேதம் அடைந்தன.

(இ-155)

### தமிழகத்தில் இருந்து திரும்பி

## வவுனியாவில் தங்கிய அகதிகள் யாழ்ப்பாணத்துக்கு

யாழ்ப்பாணம், மார்ச் 17

தமிழகத்தில் இருந்து திரும்பி வவுனியா அகதிமுகாமில் தங்கியுள்ள அகதிகளில் யாழ். மாவட்டத்தை சேர்ந்த 40 பேர் எதிர்வரும் 23 ஆம், 25 ஆம் திகதிகளில் நரோமா கப்பலில் பருத்தித்துறைக்கு அழைத்து வரப்படவிருக்கின்றனர்.

வவுனியாவில் இருந்து ரயில் மூலம் திருகோணமலைக்கு அழைத்துச் செல்லப்படும் அவர்கள் நரோமா கப்பலில் பருத்தித்துறைக்கு அழைத்து வரப்படுவர் என்றும் —

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழுவின் பாதுகாப்புடன், அகதிகளுக்கான ஐ.நா. தூதரக அதிகாரிகள் அகதிகளை கப்பலில் கூட்டி வருவர் — என்றும் தெரிவிக்கப்பட்டது.

அகதிகளுக்கான ஐ நா. அதிகாரிகள் பருத்தித்துறை வந்து சேரும் அகதிகளை அவர்களின் வீடுகளுக்கு அழைத்துச் செல்வர் என்றும் —

அவர்களுக்கு ஆறுமாத காலத்துக்கு உலர் உணவு நிவாரணம் வழங்க ஏற்பாடு செய்யப்படும் என்றும் —தெரிவிக்கப்பட்டது.

ஏற்கனவே தமிழகத்தில் இருந்து திரும்பிய 5. குடும்பங்களைச் சேர்ந்த 150 பேர் யாழ்ப்பாணத்தில் உள்ளனர்.

(க-3)

## திருமலையில் கைது செய்யப்பட்ட 82 தமிழர் குறித்து தகவல் இல்லை

யாழ்ப்பாணம், மார்ச் 17

திருகோணமலை மாவட்டத்தில் 1990 ஆம் ஆண்டு காலப்பகுதிக்குப் பின் படையினரால் கைது செய்யப்பட்ட 82 தமிழர்கள் நிலை பற்றி இதுவரை எதுவித தகவலும் கிடைக்கவில்லை.

1990 நடுப்பகுதியில் ஆலங்கேணி விநாயகம் மகாவித்தியாலயத்தில் அகதிகளாகத் தங்கியிருந்தவர்களில் 44 பேர் படையினரால் கைது செய்யப்பட்டனர். அரச ஊழியர், ஆசிரியர், ஊழியர் என வேறுபாடின்றி சகலரும் கைது செய்யப்பட்டனர்.

தொடர்ந்து இவ் வித்தியாலயத்தில் இருந்து "லக்சம் போர்க்" முகாமுக்கு இந்த அகதிகள் இடம் மாற்றப்பட்ட போது மேலும் 8 பேர் கைது செய்யப்பட்டனர்.

பின்னர் படையினர் இம் முகாமில் மேற்கொண்ட தொடர் சுற்றிவளைப்புகளின் போது மேலும் 30 பேர் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் களுத்துறை திருகோணமலை ஆகிய பகுதி சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் பற்றி எதுவித விபரங்களும் இதுவரை தெரிவிக்கப்படவில்லை. (இ-த)

## மட்டக்களப்பு மாநகரசபையை கைப்பற்ற ஐ.தே.க. முயற்சி!

கொழும்பு, மார்ச் 17

கடந்த முதலாம் திகதி மட்டக்களப்பு மாநகர சபைக்கு நடைபெற்ற தேர்தலில் பெரும்பான்மை இடத்தைப் பெறாத ஐக்கிய தேசியக் கட்சி குறுக்கு வழியில் அங்கு ஆட்சியைக் கைப்பற்ற முனைந்திருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

இதற்காக லட்சக் கணக்கான ரூபா பணமும் பஜிரோ ஜீப் போன்றவற்றையும் லஞ்சமாக வழங்க அக்கட்சியினர் முன்வந்துள்ளனராம்.

19 உறுப்பினர்களைக் கொண்ட மட்டக்களப்பு மாநகர சபையில் ஒன்பது இடங்களை செழியன் பேரின்பநாயகம் தலைமையிலான சுயேச்சைக்குழு கைப்பற்றியிருந்தது தெரிந்ததே.

ஐந்து இடங்களில் ஐ. தே. கவும், ஓர் இடத்தில் முஸ்லிம் காங்கிரஸும் வென்றிருந்தன.

ஈரோஸ் அமைப்பைச் சேர்ந்தவர்கள் என தம்மைக் கூறிக்கொண்ட குழுவினர் மூன்று இடங்களிலும்—

இராணுவம் மற்றும் அரசுக்கு சார்பாகச் செயற்பட்ட தமிழ் சுயேச்சைக்குழு ஓர் இடத்திலும் வெற்றி பெற்றிருந்தன.

ஈரோஸ் அமைப்பைச் சேர்ந்தவர்கள் என தம்மைக் கூறிக்கொள்ளும் குழுவினர், எந்தக் கட்டத்திலும் சிங்கள அரசுடன் தாங்கள் இணங்கிப் போகப்போவதில்லை என தேர்தல் பிரசாரத்தின்போது கூறிவந்தனர்.

ஆனால் பணம் மற்றும் பஜிரோ ஜீப் ஆசை காட்டப்பட்டதை அடுத்து, இந்தக் குழுவைச் சேர்ந்த மூவரும் ஐ. தே. கவை ஆதரிக்க இணக்கம் தெரிவித்திருக்கின்றனர்.

செழியன் பேரின்பநாயகம் தலைமையிலான சுயேச்சைக் குழு உறுப்பினர்களில் சிலரை

(6 ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



உலையின் தேர்தலையும் குளறுபடி... முடிஞ்ச பிறகு ஆட்சியைப் பிடிக்கிறதிலையும் குளறுபடி!

## பிக்குகளின் யாழ். விஜயம் முட்டுக்கட்டையிட முயற்சி

யாழ்ப்பாணம், மார்ச் 17

யாழ்ப்பாண நிலைமையை அறிவதற்காக யாழ்ப்பாணம் வர முயலும் பௌத்த பிக்குகளைத் தடுக்கும் முயற்சி கொழும்பில் மேற்கொள்ளப்படுவதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

யாழ்ப்பாண மக்களின் அவலங்களை நேரில் கண்டறியவும் —

விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தவும் — பௌத்த பிக்குகள் பலர் யாழ்ப்பாணம் வர இணங்கி இருந்தனர் என்பது தெரிந்ததே.

யாழ். வர விரும்பிய குறிப்பிட்ட ஐந்து பௌத்த பிக்குகளின் பெயர் விவரங்களை யாழ். வந்திருந்த சமயம் அங்கிலிக்கன் ஆயர் கெனத் பெர்னாண்டோ விடுதலைப் புலிகளிடம் சமர்ப்பித்து அனுமதியும் பெற்றுச் சென்றிருந்தார்.

தற்போது இந்தப் பிக்குமாரின் யாழ்ப்பாண விஜயத்துக்கு முட்டுக்கட்டை போடும் முயற்சிகள் கொழும்பில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அங்கிலிக்கன் திருச்சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

(இ-8)

### தென்மாகணத் தேர்தல்

## சந்திரிகா பங்குபற்றும் கூட்டங்களில் ஜனத்திரள்

### ஆளும் கட்சியில் கலவரம்

கொழும்பு, மார்ச் 17

தென்மாகாணத்தில் திருமதி சந்திரிகா குமாரணதுங்க கலந்து கொள்ளும் பிரசாரக் கூட்டங்களுக்கே மக்கள் பெரும் எண்ணிக்கையில் கலந்து கொள்வதாகவும் —

இது ஆளும் ஐக்கிய தேசியக் கட்சி உயர் வட்டாரங்களில் பலத்த கலவரத்தை ஏற்படுத்தி இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சந்திரிகா அலை தென்பகுதித் தேர்தல் களத்தில் வீசுவது பற்றி கவலை அடைந்த காலிமாவட்டத்தைச் சேர்ந்த முக்கிய ஐக்கிய தேசியக்கட்சிப் பிரமுகர் ஒருவர் கட்சியின் பெரும் தலைகள் கலந்து கொண்ட விருந்துபசாரம் ஒன்றில் சந்திரிகா அலையைச் சமாளிக்க ஐ தே. க தேர்தல் பிரசாரக் கூட்டங்களுக்கு சினிமா நடிகை அல்லது நடிகர் ஒருவரையாவது கொண்டு வர வேண்டும் என்று கேட்டுக் கொண்டாராம்.

1977 தேர்தலின் போது சினிமா நடிகர்களை ஐக்கிய தேசியக் கட்சியினர் பயன்படுத்தியதையும் அவர் அப்போது சுட்டிக் காட்டத்தவறவில்லையாம்.

இந்த யோசனையை விருந்தில் கலந்து கொண்ட முக்கிய தலைவர்கள் பாரதூரமாக எடுத்துக் கொள்ளவில்லை என்றும் —

கூட்டங்களுக்குச் சேரும் மக்களை வைத்து வாக்குகளை நிர்ணயிக்கமுடியாது என்றும் அவர்கள் கூறினார்கள் என்றும் "சண்டே ஐலண்ட்" தகவல் வெளியிட்டிருக்கிறது

(உ-எ)

## ஆளுநர்—ஜெயலலிதா பிணக்கு தொடர்கிறது

சென்னை, மார்ச் 17

தமிழக சட்டசபையின் வரவு செலவுத் திட்டக் கூட்டத் தொடரை நேற்று ஆளுநர் எம். சென்னாரெட்டி ஆரம்பித்து வைத்தார்

ஆளுநருக்கும் முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கும் இடையேயான உறவில் கசப்பு உணர்வு மேலோங்கி இருப்பது நேற்று வெளிப்படையாகத் தெரிந்தது.

செல்வி ஜெயலலிதா முதலமைச்சராக வந்தபின்னர் கடந்த மூன்றாண்டுகளாக நிகழ்த்தப்பட்ட ஆளுநர் உரைகளில் புரட்சித் தலைவி என்றே முதலமைச்சர் அழைக்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### மட்டக்களப்பில் வீரச்சாவு

யாழ்ப்பாணம், மார்ச் 17

மட்டக்களப்பு மாவட்டத்தில் புலுட்டுமானோடை காட்டுப் பகுதியில் புலிகள் இயக்க முகாம் ஒன்றை சுற்றிவளைக்கும் நோக்குடன் இராணுவத்தினர் புறப்பட்டுச் சென்றவேளை விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் நேரடி மோதல் இடம்பெற்றது

கடந்த வெள்ளி பிற்பகல் 2 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் விடுதலைப் புலிகள் இயக்க போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்

வீரவேங்கை சிவேந்திரன் (கந்தசாமி துரைசிங்கம்—களுவாஞ்சிக்குடி) என்ற போராளியே வீரச்சாவடைந்தார்.

(உ-த)

### ஒய்வூதிய வவுச்சர் வந்து சேர்ந்தது

யாழ்ப்பாணம், மார்ச் 17

யாழ். மாவட்ட ஒய்வூதியர்களின் இம் மாதத்துக்கான (மார்ச்) பென்சன் வவுச்சர்கள் யாழ் செயலகத்துக்கு வந்து சேர்ந்துள்ளன

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளையின் உபதலைவர் மேற்படி வவுச்சர்களை 'நரோமா' கப்பலில் இங்கு எடுத்துவந்துள்ளார்.

யாழ் அரச அதிபரின் வேண்டுதலின் பேரில் ரயிலோ ஒய்வூதியர்களின் காசோலைகளும இங்கு அனுப்பப்பட்டுள்ளன.

(உ-5)

## வடக்கில் சுமுக நிலையை உண்டாக்கும் முயற்சியை ஆயர்கள் தொடர்கின்றனர்

யாழ்ப்பாணம், மார்ச் 17

யாழ்ப்பாணம் வந்து திரும்பிய அங்கிலிக்கன் திருச்சபை ஆயர் அதி. வண. கெனத் பெர்னாண்டோவும், கத்தோலிக்க திருச்சபை ஆயர் அதி. வண. மார்க்கஸ் பெர்னாண்டோவும் இங்கு சுமுகமான சூழ்நிலையை உருவாக்குவது [illegible] [illegible] பேச்சு நடத்தி வருவதாகத் தெரியவந்துள்ளது.

விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளுடன் யாழ்ப்பாணத்தில் நடத்திய பேச்சுக்களின்போது வலியுறுத்தப்பட்ட சுமுகமான சூழ்நிலையை உருவாக்குவதற்குத் தேவையான நடைமுறைகள் குறித்து அரச அதிகாரிகளுடனும் அவர்கள் பேச்சு நடத்தி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

வடக்கில் சுமுக சூழ்நிலையை உருவாக்குவதற்கு உருப்படியான திட்டம் ஒன்றை வகுத்த பின்னரே தாம் மீண்டும் யாழ்ப்பாணம் வருவதற்கு முடிவு செய்துள்ளதாகவும் —

சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு உதவுவதற்கு பௌத்த குருமாரின் ஆதரவைத் திரட்டி வருவதாகவும் — ஆயர்கள் இருவரும் தம்மைச் சந்தித்த தமிழ்ப் பிரமுகர் ஒருவரிடம் தெரிவித்துள்ளனர்

இதேவேளை —

கிறிஸ்தவ அமைப்புகள் உருவாக்கியுள்ள சர்வமத சமாதானக் குழுவில் அங்கம் வகிக்கும் சகல உறுப்பினர்களும் இருநாட்களில் கூட்டம் நடத்தி, அடுத்து எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து விளக்கப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் பிரதேச சபை

## கேள்வி அறிவித்தல்-1994

திருநெல்வேலிப் பொதுச் சந்தையில் சேகரிக்கப் படுகின்ற கழிவுப் பொருள்களை, இழுபொறி இயந்திரம் (TRACTOR) மூலம் கல்லுண்டாய் வெளியில் அகற்றுவதற்கு கேள்வி விண்ணப்பங்கள் என்னால் கோரப்படுகின்றன. வாரத்தில் ஆகக்குறைந்தது மூன்று நாட்களுக்கு இப்பணியை நிறைவேற்றுதல் வேண்டும். ஒரு தடவை சேவையில் ஈடுபட எவ்வளவு தொகை கோரப்படுகின்றது என்பதனை கேள்விக்காரர்கள் தமது கேள்வி விண்ணப்பத்தில் குறிப்பிடுதல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் 21 - 03 - 1994 திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணிவரை மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணம் ரூபா 100/-ம், மீளளிக்கப்படக் கூடிய வைப்புப் பணம் ரூபா 500/-ம் செலுத்துவதின் பேரில் செயலாளரினால் விநியோகிக்கப்படும். கேள்விகள் யாவும் 22 - 03 - 1994 முற்பகல் 10-00 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும். 22-3-1994 முற்பகல் 11-00 மணிக்கு கேள்விகள் யாவும் என்னால் உடைக்கப்பட்டு, பரிசீலனை செய்யப்படும். அத்தருணம் கேள்விக்காரர் யாவரையும் நேரில் சமுகமளிக்கும் வண்ணம் வேண்டுகிறேன்.

கேள்விப் பத்திரங்கள் யாவும் விசேட ஆணையாளர், நல்லூர் பிரதேச சபை, திருநெல்வேலி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அல்லது நல்லூர் பிரதேச சபை அலுவலகத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடப்பட வேண்டும். மேலதிக விவரங்களை அறிய விரும்புவோர், நல்லூர் பிரதேச சபை, தலைமை அலுவலகத்தில், அலுவலக நேரத்தில் அறிந்துகொள்ளலாம்.

ஆ. மகாலிங்கம்,
விசேட ஆணையாளர்.

நல்லூர் பிரதேச சபை,
தலைமையகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
11-03-1994 [சி-7567]



## உதவிப்பிராமண ஐயர் தேவை

பொலிகண்டி அருள் மிகு கந்தவனம் சுப்பிரமணியர் தேவஸ்தானத்தில் மண்டபமும், மடப்பள்ளி வேலையும் செய்யக்கூடிய பிராமண குலத்தைச் சேர்ந்த ஐயர் தேவைப்படுகின்றார். சகல விவரங்களுக்கும் தேவஸ்தான தர்மகர்த்தா சபையோடு நேரடியாக தொடர்பு கொள்ளவும்.

மு கு.
வெள்ளிக்கிழமை உற்சவமும், மாதப்பிறப்பு உற்சவமும் (சங்கராந்தி) உபயம் வெற்றிடமாக உள்ளது. உபயங்கள் செய்ய விரும்புவோர் தர்மகர்த்தா சபையோடு தொடர்பு கொள்ளவும்.

செயலாளர்,
தர்மகர்த்தா சபை
(கந்தவனம் தேவஸ்தானம்)

பொலிகண்டி,
வல்வெட்டித்துறை. (29945)



## நன்றி நவில்கின்றோம்

### திருமதி சுலோஜனா மகேந்திரன்

தேவாலய வீதி சங்கானையைச் சேர்ந்த கலாநிதி திருமதி சுலோஜனா மகேந்திரன் (யாழ் பல்கலைக்கழக மருத்துவபீடம்) அவர்களின் மரணச்சடங்கில் கலந்து கொண்டு எமக்கு ஆறுதல் கூறிய அனைவருக்கும் குடும்பத்தினர் சார்பில் நன்றி அறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

திரு. சோ. மகேந்திரன் (கணவர்),
திரு S. சீவரத்தினம் (தகப்பன்).

தேவாலய வீதி,
சங்கானை. [29944]



## கண்ணீர் அஞ்சலிகள்

### துரைசிப்பிள்ளை மோசேஸ் பிலேந்திரன்

(யாழ் மாவட்ட உதைபந்தாட்ட மத்தியஸ்தர்கள் சங்க முன்னை நாள் உறுப்பினர்)

எம்மோடு கலந்து ஆடுகளம் பல கண்ட
கர்ம வீரனுக்கு
எமது இதயம் கனிந்த அஞ்சலிகள்
அவரது குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்கள்

— யாழ். மாவட்ட உதைபந்தாட்ட
மத்தியஸ்தர்கள் சங்கம்

(சி-7572)



## கண்ணீர் அஞ்சலி

நேற்று முன்தினம் அகால மரணமடைந்த
### எஸ்.எம். பிலேந்திரன் (மோசேஸ்)
(உபதலைவர், யாழ் உதைபந்தாட்ட
மத்தியஸ்தர் சங்கம்)
அவர்களுக்கு
எமது கண்ணீர் அஞ்சலிகள்
அவரது குடும்பத்தவர்களுக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்கள்

— யாழ். மாவட்ட அமெச்சூர் மெய்வல்லுநர்
சங்கம்

(சி-7572)


# வங்கியாளர் பரீட்சை முடிவுகள் வந்து சேர்ந்தன

யாழ்ப்பாணம், மார்ச் 17
கடந்த நவம்பரில் யாழ்ப்பாணத்தில் நடந்த வங்கியாளர் பரீட்சைகளின் முடிவுகள் யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரப்பட்டுள்ளன.

வங்கியாளர் இடை நிலை மற்றும் இறுதிப்பரீட்சைகளின் முடிவுகளே வந்து சேர்ந்துள்ளன.

அதேவேளை —
எதிர்வரும் நவம்பரில் நடக்கவிருக்கும் வங்கியாளர் பரீட்சைக்கான விண்ணப்பப்படிவங்கள் இங்கு எடுத்து வரப்பட்டுள்ளதாகவும் —

பரீட்சைக்கு விண்ணப்பிக்க விரும்புபவர்கள் விண்ணப்ப படிவங்களை தம்மிடம் பெறலாம் என்றும்

இலங்கை வங்கி பிராந்திய முகாமையாளர் திரு. எஸ். கணேசமூர்த்தி தெரிவித்தார்.

இப்பரீட்சைக்கான விண்ணப்பிக்க வேண்டிய இறுதித் தினம் அடுத்த மாதம் எட்டாம் திகதியாகும்.

(உ-3)

## இன்று

''சைவமணி'' சோ. க. வேலாயுதர் பண்ணாகம் விசவத்தனை முருகன் பேரால் பாடிய முருகேசர் வெண்பா நூல் வெளியீட்டு விழா பண்ணாகம் ஸ்ரீ முருகன் இந்து சமய விருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் இன்று முற்பகல் 11 மணிக்கு விசுவத்தனை முருகன் ஆலய முன்றிலில் நடைபெறும்.

(த)

# கொச்சைத் தொடர்களை பாவிப்பதை எழுத்தாளர் தவிர்க்க வேண்டும்

## நூல் அறிமுக விழாவில் பேச்சு

யாழ்ப்பாணம், மார்ச் 17
தற்பொழுது எழுத்தாளர்கள் ஆங்கிலப் பதங்களையும் கொச்சைத் தொடர்களையும் தாராளமாகப் பயன்படுத்துகிறார்கள். இது கட்டாயம் தவிர்க்கப்பட வேண்டியது.

தென் இந்திய திருச்சபையின் பேராயர் அதிவண. கலாநிதி எஸ். ஜெபநேசன் இவ்வாறு கூறினார்.

பண்டிதர் ம. ந. கடம்பேஸ்வரனின் ''முனைவோர்'' வாழ்வியல் நூல் அறிமுக விழாவில் மதிப்பீட்டுரை வழங்கிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

வட்டுக்கோட்டை தமிழ்ச் சங்க வெளியீடான இந்நூலின் அறிமுக விழா அண்மையில் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் பண்டிதர் அ. ஆறுமுகம் தலைமையில் நடைபெற்றது.

பேராயர் ஜெபநேசன் மேலும் பேசுகையில் கூறியதாவது:

ஆசிரியர் கடம்பேஸ்வரன் தற்காலத்து ஆரவாரத் தன்மைகளைத் தவிர்த்து ஆறுமுகநாவலர், கணேசையர், பண்டிதமணி போன்ற பண்பட்ட எழுத்தாளர்களின் நடையைப் பின்பற்றி தற்காலத்தில் ஒரு நூல் வரைந்துள்ளார். தமிழ் படிக்கும் சகல மாணவர்களும் இந்த நடையையே பின்பற்ற வேண்டும் என்பது எனது விருப்பம் — என்றார்.

வண பிதா பிரான்சிஸ் யோசேப் அடிகளார், பண்டிதர் க. மயில்வாகனம், திரு க. திருநாவுக்கரசு, கவிஞர் சோ. பத்மநாதன், பண்டிதர் மு. க. வேலாயுதம்பிள்ளை ஆகியோரும் விழாவில் உரை நிகழ்த்தினார்கள். (க-161)

# எதிர்நீச்சல் போடும் துணிவு எழுத்தாளனுக்கு வேண்டும்

## இலக்கியக் கருத்தரங்கில் உரை

யாழ்ப்பாணம், மார்ச் 17
''எழுத்தாளன் மண்ணையும் மக்களையும் நேசிக்க வேண்டும்; அத்துடன் எப்போதும் எதிர்நீச்சல் போடும் திராணியுள்ளவனாக இருக்க வேண்டும்''

சுன்னாகம் பொது நூலக மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற ''நாவேந்தன் இலக்கிய முயற்சிகள்'' என்ற கருத்தரங்கில் கலந்துகொண்டு ஆய்வுரை நிகழ்த்திய பேராயர் கலாநிதி எஸ் ஜெபநேசன் இவ்வாறு கூறினார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமஸ்கிருதத்துறைத் தலைவர் பேராசிரியர் வி சிவசாமி தலைமையில் கருத்தரங்கு நடைபெற்றது

பேராயர் ஜெபநேசன் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

''சிறுகதை நவீனம், நாடகம், கவிதை, அரசியல், விமர்சனம் முதலான அனைத்துத் துறைகளிலும் எழுதக் கூடிய ஆற்றல் பெற்ற மிகச் சிலரில் ''நாவேந்தனும் ஒருவர் ஆவார் அவரது கதைபுனையும் ஆற்றலுக்கு ''வாழ்வும் தெய்வமகனும்'' கட்டியங் கூறும்''

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ் விரிவுரையாளர் திரு. சி. இலவிங்கராசா, முன்னாள் சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. குமரவேல், சுன்னாகம் மயிலணி சைவ மகாவித்தியாலய அதிபர் திரு. சு. துரைலிங்கம் ஆகியோர் உட்படப் பலர் விழாவில் உரை நிகழ்த்தினார்கள்.

# ஆலயங்களில்

பண்ணாகம் விசவத்தனை முருகமூர்த்தி கோயில் வருடாந்த உற்சவம் இன்று காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. தேர்த்திருவிழா எதிர்வரும் 26 ஆம் திகதியும் மறு நாள் தீர்த்தோற்சவமும் இடம் பெறும்.

(த-28)

★ ★ ★

சுதுமலை விசாலாட்சி அம்பாள் ஸ்ரீ விஸ்வநாத சுவாமி கோயில் வருடாந்த உற்சவம் இன்று ஆரம்பமாகி நடைபெறும். சிறப்பு நிகழ்ச்சியாக தினமும் மாலை 6 30 க்கு நல்லைக் குருமணியின் பிரதம சிஷ்யன் அருள்மொழி அரசு பிரம்மஸ்ரீ சிவ வை. நித்தியானந்த சர்மாவின் ''திருவிளையாடல் புராணம்'' தொடர் சொற்பொழிவு இடம்பெறும். (த)

★ ★ ★

அரியாலை நீர்நொச்சித்தாழ்வு ஸ்ரீசித்தி விநாயகர் கோயில் சிவபெருமான் வருடாந்த உற்சவம் இன்று முற்பகல் 11 30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும். எதிர்வரும் 26 ஆம் திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறும்.

★ ★ ★

யாழ். நாயன்மார்கட்டு ஸ்ரீ வெய்யிலுகந்த விநாயகர் கோயில் மஹோற்சவம் நாளை வெள்ளி காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 14 நாட்கள் நடைபெறும்.

(த)

★ ★ ★

இணுவில் அருள் மிகு சிவகாமி அம்மன் கோவில் மஹோற்சவம் நேற்றுக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. 13 நாட்கள் நடைபெறும் உற்சவத்தில் எதிர்வரும் 26 ஆம் திகதி சனிக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தமும் இடம்பெறும். (த)

★ ★ ★

கோண்டாவில் தில்லையம்பதி அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள் கோயில் பங்குனி உத்தர நவோதிர சகஸ்ர சங்காபிஷேகமும் இலட்சார்ச்சனையும் திருவிளக்குப் பூசையும் தொடர்பான நிகழ்வுகள் இன்று ஆரம்பமாகின்றன.

இலட்சார்ச்சனை எதிர்வரும் 26 ஆம் திகதி நிறைபெறும். மறுநாள் காலை 7.30 மணிக்கு அம்பாளுக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் சங்காபிஷேகம் நடைபெறும். பிற்பகல் 4 மணிக்கு திருவிளக்குப் பூசை இடம்பெறும்.

(த)

★ ★ ★

யாழ்ப்பாணம், நீராவியடி தோப்பு ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் ஆலய அலங்கார திருவிழா இன்று வியாழக்கிழமை ஆரம்பமாகிறது. எதிர்வரும் 26 ஆம் திகதி கணபதி ஹோமமும், அடுத்த நாள் தெருவலத் திருவிழாவும் நடைபெறும். தினமும் பண்ணிசை, சமயச்சொற்பொழிவு, கதாப்பிரசங்கம் ஆகியன இடம்பெறும்.

(அ)

# வைத்தியசாலைப் பணி முன்னேற நடவடிக்கை எடுக்க வேண்டும்

## மேய்ப்புப் பணி மாநாட்டில் தீர்மானம்

யாழ்ப்பாணம், மார்ச் 17
''தற்காலப் போர்ச் சூழல் கணக்கில் எடுக்கப்பட்டு நோயாளர் பராமரிப்பு, இரத்த தானம் போன்ற வைத்தியசாலைப் பணிகள் முன்னேற நடவடிக்கை எடுக்க வேண்டும்''

கடந்த சனி யாழ் கத்தோலிக்க திருச்சபை மேய்ப்புப் பணி மாநாட்டின் 5ஆம் நாள் அமர்வில் இவ்வாறு தீர்மானம் எடுக்கப்பட்டது.

மேலும், யாழ். மனிதமுன்னேற்ற நிலையம் நிவாரணப் பணியுடன் காலத்துக்கும் தேவைக்கும் ஏற்ப சுயதொழில் முயற்சிகள், சிறுகைத்தொழில்கள், பயிர்ச் செய்கைகள் போன்றவற்றை ஊக்குவிக்க வேண்டும் எனவும் கூறப்பட்டது.

இந்த அமர்வில் குடும்ப மேய்ப்புப் பணி, நற்செய்தி அடுவிப்பும், பண்பாடும், கல்வி மறைக்கல்வி - உயர் கல்வி- நோயாளர் மேய்ப்புப் பணி ஆகிய விடயங்கள் ஆய்வுக்கு எடுக்கப்பட்டன.

யாழ்ப்பாணம், மன்னார், திருமலை - மட்டுநகர் மறை மாவட்டங்களை ஒரு பிரதேச ஆயர் மன்றமாக இணைப்பதற்குரிய நடவடிக்கைகளில் யாழ். திருச்சபை ஈடுபட வேண்டும் என்ற விருப்பம் தெரிவிக்கப்பட்டது. (ச)


## வெற்றுப் போத்தல்கள் தேவை

பின்வரும் வெற்றுப் போத்தல்கள் எமது நிறுவனத்தின் பாவனைக்காக கொள்வனவு செய்யப்படும்.

1. 300 மி. லீ. போத்தல்கள், வெற்றுப்பெட்டி
2. 750 மி. லீ. போத்தல்கள்
3. 625 மி லீ. போத்தல்கள்
4. ஜாம் போத்தல்கள்
5. சம்போ பிளாஸ்ரிக் போத்தல்கள்

இவற்றை விற்பனை செய்ய விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

பொது முகாமையாளர்,
யாழ்ப்பாணம் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி,
இல 75/1, பலாலி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

● (விலை [illegible]) [சி-7566]


## வைத்தியசாலைக்கு றோனியோ

யாழ்ப்பாணம், மார்ச் 17
யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை நிர்வாகப் பகுதிக்கு ''றோனியோ'' கருவி ஒன்றை அனுப்பி வைக்குமாறு வைத்தியசாலை நிர்வாகம் சுகாதார மகளிர் விவகார அமைச்சை கேட்டுள்ளது. (இ-17)

# இரு தி.மு.க. எம்பிகளில் ஒருவர் வை.கோ. அணியாம்

சென்னை, மார்ச் 17
தமிழக சட்டசபையில் உள்ள இரண்டு தி. மு. க. எம். எல். ஏக்களில் ஒருவர் கோபாலசாமி அணியிலும் மற்றவர் கருணாநிதி தலைமையிலான தி மு க விலும் இருபதாக தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இதன் காரணமாக எழும்பூர் எம்.எல்.ஏ. பரிதி இளம் வழுதி தி.மு.க. -1 என்றும் துறைமுகம் எம். எல். ஏ. செல்வராஜ் தி.மு.க- 2 என்றும் சட்டசபையில் அழைக்கப்படுவார்கள் என்று சபாநாயகர் சேடப்பட்டி முத்தையா நேற்று செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

இதேவேளை — அ.தி.மு.க. வில் இருந்து வெளியேற்றப்பட்ட முன்னாள் மாநில அமைச்சர்களான அழகு திருநாவுக்கரசு, ஜி. விஸ்வநாதன் ஆகியோர் எந்தக் கட்சியையும் சாராதவர்களாக சட்டசபையில் கணிக்கப்படுவார்கள் என்றும் சபாநாயகர் சொன்னார்.

(ஒ-எ)


## செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு

நிறுவனம்
விளையாட்டுக் கழகம் நடத்தும்

## உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி

★ இப்போட்டி 11 பேர் கொண்ட அணிகளுக்கு இடையே நடைபெறும்.
★ போட்டி நேரம்:- 30 — 5 — 30 நிமிடம்
★ போட்டிக்குப் பங்குபற்றும் கழகங்கள் குழு ஒன்றிற்கு ரூபா 50/- பிரவேசப் பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.
★ போட்டி ம. ம. வித்தியசாலை மைதானத்தில் நடைபெறும்.
★ போட்டி நடைபெறும் காலம்;- 30-03-1994 தொடக்கம் 30-04-1994 வரைக்கும்.
★ விண்ணப்ப முடிவுத் திகதி:- 20-03-1994.

தொடர்பு கொள்ளும் முகவரி:-

சே. செல்வராசா(தலைவர்)
தும்பளை,
பருத்தித்துறை.

சே. செல்வராசா
குகன் ஸ்ருடியோ,
பருத்தித்துறை.

சுற்றுப்போட்டியாளர்,
செவிப்புலன் வலுவற்றோர் வி. கழகம்,
பருத்தித்துறை (யாழ் மாவட்டம்).

(29951)



உ
சுதுமலை
ஸ்ரீ விசாலாட்சி அம்பாள்
ஸ்ரீ விஸ்வநாத சுவாமி
மகோற்சவகால

## "தெய்வீக அருள் சொற்பொழிவு"

### "திருவிளையாடற் புராணம்"

17 — 3 — 94 கொடியேற்றம் தொடக்கம்
28 — 3 — 94 பூங்காவனம் வரை



தினமும் மாலை
6 30 மணிக்கு
நிகழ்த்துபவர்:-
நல்லைக் குருமணியின்
பிரதம சிஷ்யன்
"அருள்மொழி அரசு"
கந்தர்மடம்
பிரம்மஸ்ரீ சிவ. வை.
நித்தியானந்த சர்மா

— ஸ்ரீ. க. இராசாக்குருக்கள்
சிவன் கோவில்

அன்பளிப்பு:
வி எஸ் எம். ஸ்ரோர்ஸ்
எஸ். மருதலிங்கம்,
மானிப்பாய். (29095)



## அறிவித்தல்

18 - 03 - 94 வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு ஏற்பாடு செய்திருந்த யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபையின் அங்கத்துவ சங்கங்களின் கலந்துரையாடலும் அதனைத் தொடர்ந்து நடைபெறவிருந்த ப. நோ. கூ. சங்க, ப. தெ. வள கூட்டுறவுச் சங்கங்களினதும் அங்கத்துவ இரண்டாம்படி கூட்டுறவுச் சங்கங்களினதும் கலந்துரையாடலும் அன்றைய தினம் நடைபெற மாட்டா என்பதை அறியத்தருகிறோம்.

தலைவர்
யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபை.

(சி/7570)



## நன்றி கூறுகிறோம்

எனது சகோதரி

### செல்வி. சிவசங்கரன் சிவசக்தி

அவர்களின் அகால மறைவு செய்திகேட்டு நேரில் வந்து அனுதாபம் தெரிவித்தும் அனுதாபச் செய்திகளை விடுத்தும் இறுதி ஊர்வலத்தில் பங்குபற்றியும் அது சம்பந்தமான ஏற்பாடுகளில் ஒத்துழைத்தும் உதவி புரிந்த அன்பர்கள், நண்பர்கள், உற்றார், உறவினர்கள் மற்றும் வர்த்தகப் பெருமக்களுக்கு உளப்பூர்வமாக நன்றி தெரிவிக்கிறேன்.

எமது சகோதரியின் மறைவு வேளை எமக்கு தங்கள் சேவைகளை வழங்கிய தமிழீழ காவல்துறையினர், சாவகச்சேரி, யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி டாக்டர்கள், ஊழியர்கள் ஆகியோருக்கும் மறைவுக்கு அஞ்சலி செலுத்தி தமது நிறுவனங்களை அடையாளமாக மூடிய திருநெல்வேலி வர்த்தகர் பிரமுகர்களுக்கும் மற்றும் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள், விரிவுரையாளர், ஊழியர்கள் ஆகியோருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

-கணேசன்
(கணேசன் களஞ்சியம் திருநெல்வேலி)

(29953)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்பதாவது அகவை நிறைவு காணும் பெரியார்

# பண்டிதர் நா. விசுவலிங்கம் ஆசிரியர்

சேவை நலம் போற்றும் மலர்

## நாட்டுக்கு நற்பணிகள் பல ஆற்றிய பெருந்தகை

புளியங்கூடல் ஒரு சிறிய கிராமம். நீர்வளம், நிலவளம் நிறைந்த கிராமம். மக்களில் பெரும்பான்மையோர் விவசாயிகள். ஒற்றுமையும் உடல் நலமும் மிக்கவர்கள். ஏழை பணக்காரர் என்ற வித்தியாசமின்றி ஒரே தரத்தில் உள்ளவர்கள்.

மிகவும் பிரசித்தி பெற்ற அம்பாள் ஆலயம் இங்கு உண்டு. நித்திய நைமித்திய பூசை ஒழுங்குகள், நிர்வாகத் துறைகள் மற்றைய ஆலயங்களுக்கு முன்மாதிரியாக நடைபெறுகின்றன. அம்பாளின் அருளாட்சி இக் கிராமத்தில் நிறைய உண்டு.

தில்லையர் நாகலிங்கம் ஓர் சிறந்த விவசாயி. புளியங்கூடல் கிராமத்துக்கு தலைவனாகவும் விளங்கினார் இவரது மூத்த மகன் விசுவலிங்கம் ஆரம்பக் கல்வியை அவ்வூர் நடராஜா வித்தியாசாலையில் கற்றார். ஆசிரிய மணி மருதையனார் இவருக்கு சிலகாலம் ஆசிரியராக இருந்தார். இதனால் இவர் யாழ்ப்பாணத்தில் சிறந்த பாடசாலையொன்றில் சேர்ந்து படிக்க வேண்டிய உதவிகள் வசதிகளைச் செய்து வைத்தார்.

சிரேட்ட தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியெய்தி தராதரப் பத்திரமற்ற ஆசிரியராக படிப்பிப்பதற்கு வசதி இருந்தும் வயது நிரம்பாமை காரணமாக சில காலம் நொத்தாரிசுக்கு உறுதி எழுதும் லிகிதர் ஆக இருந்தார்.

பின்பு பரமேஸ்வர பண்டித ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பிரவேசப்பரீட்சையில் சித்தியெய்தி அங்கு படித்துப் பயிற்சி பெற்ற பண்டித ஆசிரியராக வந்து அவ்வூர் நடராஜா வித்தியாசாலையில் ஆசிரியராகப் பணியாற்றினார். பாடசாலை வளர்ச்சியிலும் தமது முழு நேரத்தையும் செலவு செய்து முயன்று வந்தார்.

கிராமச் சங்கத்தில் தந்தையைத் தொடர்ந்து நீண்டகால அங்கத்தவராயிருந்து போட்டியில்லா தலைவராகவும் இருந்தார். பின்தங்கிய கிராமமாக இருந்த புளியங்கூடல் கிராமத்தை முன்னேற்ற முயன்றார். முதலில் மூன்று ஒழுங்கைகளை கிராமச் சங்க நன்கொடை மூலம் மூன்று பிரதான வீதிகளாக்கி போக்குவரத்து வசதியினை ஏற்படுத்தினார்.

இவரது முயற்சியினால் நெசவுசாலைக் கட்டடம் மாதர் சங்கக்கட்டடமாக 120 அடி நீளமும் 20 அடி அகலமும் கொண்ட பெரியதொரு மண்டபமாக அமைந்தது. பக்கத்தில் தாய் சேய் நிலையத்துக்கும் சிறுவர் பாடசாலைக்குமாக ஓர் கட்டடம் அமைத்தார். றெட்பானா ஸ்தாபனத்தினால் தனிக் கட்டடம் அமைத்து சிறுவர்களுக்கு சத்துணவு வழங்கப்பட்டு வந்தது.

பலநோக்குக் கூட்டுறவு சங்கத்திற்கென பெரிய அழகிய கட்டடம் அமைத்தார். உபதபாற்கந்தோர் அமைத்து A தரத்திற்கு அது உயர்த்தப்பட்டு ரெலிபோன், தந்தி முதலிய வசதிகள் செய்யப்பட்டன. ஊர்காவற்றுறை வைத்தியசாலை மருத்துவக் கலாநிதி மாதத்துக்கு இரு தடவைகள் வந்து நோயாளருக்கு மருந்து கொடுத்தார். கிராமச் சங்கத்தினால் கர்ப்பிணித் தாய்மாருக்கும் குழந்தைகளுக்கும் பால்மா வழங்கப்பட்டது. பால் நிலையம் ஆரம்பிக்கப்பட்டது. சிறுவர் பாடசாலை மாணவர்களுக்கு பால் வழங்கப்பட்டது.

தையல் பயிற்சி நிலையம் ஆரம்பிக்கப்பட்டு பல பெண்பிள்ளைகள் பயிற்சி பெற்று வந்தார்கள். நெசவுசாலையில் வேலை செய்யும் 50 பெண் பிள்ளைகளுக்கு மாதம் ஒருமுறை சுகாதாரக்கல்வி, சமயக் கல்வி சம்பந்தமான விரிவுரைகள் நடைபெற்று வந்தன.

இத்தனை காரியங்கள் நிகழ்வுகளையெல்லாம் பொறுப்பேற்று மேற்பார்வை செய்து திறம்பட நடத்திய பெருமை மாதர் சங்கத் தலைவியைச் சாரும். இவர் உபகாரம், இவர் பணி செய்ய பேருதவியாக இருந்தது. இந் நிலையங்களுக்கு வரும் உத்தியோகத்தர்கள், அதிகாரிகள் ஆகியோர்களோடு பழகி வேண்டியவற்றை பெறுவதில் முதன்மை இவருக்கே உரிய தொன்று.

சனசமூக நிலையம், விளையாட்டுப் போட்டிகள், பரிசளிப்பு விழாக்கள், கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி முதலியவற்றை நடத்தி பரிசளிப்பு விழாக்கள் நடத்தி முதலாவது நிலையமாகத் திகழ்ந்தது. சிறந்த விளையாட்டு மைதானம் அமைப்பதற்கு இக் கிராமத்தில் உள்ள வெளிநாட்டு இளைஞர்கள் பெரும் தொகைப் பணத்தைச் சேர்த்து அனுப்புவதற்கு இருக்கிறார்கள்.

இவருக்கு உதவியாக திருவாளர் போசராசா தமது கட்டடத்தைச் சனசமூக நிலையத்துக்கு மூதாதையர் கருத்துக்கமைய நன்கொடையாக கொடுத்தார். தேவாரப் பாடசாலை ஒன்றை பெருந்தொகையான பணம் செலவழித்து நடத்தி வந்தார். பண்ணிசைப் பரீட்சை எடுத்து பல மாணவர் சித்தியடைந்தனர். சிறுவர் பாடசாலையை நடத்தி அவர்களுக்கு உணவும் கொடுத்து வந்தார். அவரது உதவிகள் இக்கிராம வளர்ச்சிக்கு பேருதவியாக இருந்தன. தனிப்பட்ட ஒருவர் பெருந்தொகையான பணம் செலவழித்து நடத்தியது பாராட்டுக்குரிய ஒன்றாகும்.

ஆசிரியருக்கு தாங்க முடியாத பல துன்ப நிகழ்வுகள் நிகழ்ந்தபோதிலும் மனம் தளராது செய்ய வேண்டியதை திறம்படச் செய்து முடித்த செயல் வீரன்.

ஆசிரியர் சங்கம், கிராம முன்னேற்றச் சங்கம், சனசமூக நிலையம், ஐக்கிய நாணய சங்கம், சைவ இளைஞர் சங்கம் இவற்றின் தலைவராக நீண்டகாலம் சேவையாற்றினார். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், இணக்க சபை விநாயகர் ஆலய நிர்வாக சபை ஆகியவற்றிலும் பங்கு கொண்டு உழைத்தார்.

இக்கிராமத்தில் உள்ள பலரது ஒத்துழைப்பையும் உதவியையும் வசீகரிக்கும் ஆற்றலால்தான் இவரால் திறம்படச் செயல்பட முடிந்தது. பின்தங்கிய கிராமமாக இருந்த கிராமத்தை அரசாங்கம் ஓர் முன்மாதிரிக் கிராமமாக பிரகடனப்படுத்திச் சகல வசதிகளையும் உதவியது.

சமாதான நீதிவானாக இருந்தபடியால் ஊர் மக்களது பிரச்சினைகள் தகராறுகளுக்கு நீதி வழங்கி சமாதானமாக தீர்த்து வைப்பதில் நல்ல அனுபவமும் திறமையும் மிக்கவராக திகழ்ந்தார்.

நடராஜா வித்தியாசாலையில் தொடர்ந்து 35 ஆண்டுகள் சேவையாற்றி ஓய்வு பெற்றார். ஓய்வின் பின்னர் பொதுப் பணியில் ஈடுபடுவதைக் குறைத்து ஆன்மீக வாழ்க்கையில் ஈடுபாடுடையவராகி சமய நூல்களைக் கற்பதிலும் கடவுள் வழிபாட்டிலும் காலத்தைக் கழித்தார். சித்தாந்த வகுப்புக்களிலும் சித்தாந்த விரிவுரைகளிலும் பங்குபற்றி வந்தார். 80 வயது நிரம்பிய இப்போதும் நோய் துன்பம் இல்லாது தனது வேலைகளைத் தானே செய்து கொண்டு அமைதியாக மனநிறைவோடு நிம்மதியாக வாழ்கின்றார். ஒவ்வொரு நாளும் சிவதொண்டன் நிலையம் சென்று வருகின்றார்.

இவரது மக்கள் நால்வர் இவர்கள் குழந்தைச் செல்வங்களோடு நல் வாழ்க்கை வாழ்கின்றார்கள்.

பண்டிதர் அவர்களுக்கு கும்பிடும் தெய்வம் குல தெய்வம் அம்பாள் அருள் என்றும் நிறையவுண்டு.

பெருமை பெறு சிவலிங்கப் பெரியாரே! நீங்கள் பல்லாண்டு வளமுடன் வாழ எல்லாம் வல்ல இறைவனை வாழ்த்துகின்றேன். ★

விழாத் தலைவர்
**சி. தருமலிங்கம்**
(ஆசிரியர்)
268/4 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

புளியங்கூடல் தந்த பெரியார் பண்டிதர் நா, விசுவலிங்கம் ஆசிரியர் அவர்கள் 26-02-1994 அன்று எண்பதாவது ஆண்டு நிறைவாழ்வை பூர்த்தி செய்தார், இதனை முன்னிட்டு இந்த சேவைநலம் போற்றும் மலர் வெளியிடப்படுகிறது.



அகவை எண்பது நிறைவு காணும்
**பண்டிதர் நா. விசுவலிங்கம்**
ஆசிரியர்

## ஒற்றுமையும் ஓயாத உழைப்பும் உடையவர்

ஊர்காவற்றுறையிலுள்ள ஒரு சிறிய கிராமம் புளியங்கூடல். விவசாயிகள் நிறைந்த கிராமம் அது.

ஒற்றுமையும் ஓயாத உழைப்பும் உடையவராய் எல்லோரும் அன்பாகவும் ஒருவருக்கொருவர் உதவி செய்யும் மனப்பாங்குடனும் மக்கள் வாழ்ந்தனர்.

ஆசிரியர் திருவாளர் நா. விசுவலிங்கம் தன்னலமற்ற சிந்தையோடு தான் பிறந்த புளியங்கூடல் கிராமத்தை நேசித்து ஆற்றிய பணிகள் பல. பணிகளை உணர்ந்த மக்கள் அவரைப் பாராட்டி மதிக்கிறார்கள்.

கிராமச் சங்கம், சனசமூக நிலையம், கிராம முன்னேற்றச் சங்கம், இளைஞர் மன்றம் முதலிய சங்கங்களின் தலைவராகவும் இருந்து இக் கிராமத்தின் தேவைகளை நிறைவேற்றுவதில் முயன்று செயலாற்றும் செயல் வீரர்.

இந்தக் கிராமத்தை ஓர் முன் மாதிரிக் கிராமமாக ஆக்கிய பெருமை இவரையே சாரும். இவரது சேவையை நான் நன்கு அறிவேன். இவருக்கு பாராட்டு விழா எடுப்பது பொருத்தமானதும் தேவையானதும் ஆகும்.

இச்சந்தர்ப்பத்தில் எனது கருத்துக்கள் சில கூறுகின்றேன். இப்பொழுது ஓய்வு பெற்று அமைதியாக மனநிறைவோடு ஆன்மீகப் பாதையில் வாழ்கின்றார்.

ஏறக்குறைய 40 வருடங்களுக்கு முன்பு அப்பொழுதுள்ள தீவுப் பகுதியில் நான் காரியதிகாரியாக (D. R. O.) 5 வருடங்கள் வரையில் கடமையாற்றிய காலம் அதிர்ஷ்டவசமாக இலங்கையிலேயே கிராம முன்னேற்ற இயக்கத்துக்கு ஓர் பொற்காலமாக அமைந்திருந்தது.

நாட்டுப் பற்று சமூகப் பற்று உள்ள பல இளம் தலைவர்கள் உற்சாகத்துடன் இந்த இயக்கத்தில் தொண்டு செய்வதற்கு முன்வந்தார்கள். புளியங்கூடல் அதன் சுற்றாடல் பகுதியில் வாழ்ந்த பல இளைஞர்களை திரு. விசுவலிங்கம் போன்றவர்கள் தலைமை வகித்து வழிநடத்தி பல அரிய நற்பணிகளைச் செய்தார்கள். அவரின் பணிகள் பொருளாதாரம், கல்வி, சுகாதாரம், ஆத்மீகத் துறைகளில் மக்களுக்குப் பேருதவியாக இருந்தன.

தூய சிந்தை உடையவராய் பழகுவதற்கு இனியவராய் நல்லவரை நேசிக்கும் நற்பண்பும் பிறருக்கு உதவிகள் செய்வதில் தயங்காதவராயும் அறிவு, ஆற்றல் மிக்கவராயும் உள்ள இவர் நீண்ட வாழ்வும், உடல் நலமும் பெற்று வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றேன். ★

**செ. சிவஞானம்**
இளைப்பாறிய
அரசாங்க அதிபர்,
40, கைமன் வீதி
யாழ்ப்பாணம்

## சேவை செய்து சிறந்தவர்

திரு. விசுவலிங்கம் ஆசிரியர் அவர்களை அவருடைய நெருங்கிய உறவினன் என்ற முறையிலும், மாணவன், அயலவன் என்ற முறையிலும் நான் நன்கறிவேன். இன்றும் அவரிடம் ஒரு பயம் கலந்த மரியாதையே ஏற்படுவதுண்டு. ஒரு புறம் பள்ளி ஆசிரியர் வேலை, மறுபுறம் பொதுத் தொண்டு, ஊர்த் தொண்டு.

இவருடைய வீட்டில் எவருக்கும் பெரிதும் பயன் தரும் புத்தகங்களே புத்தகத் தட்டுக்களில் கச்சிதமாக அடுக்கப்பட்டிருக்கும். அத்துடன் ஊருக்கு ஒதுக்குப் புறமாக அமைந்திருக்கும் ஐயனார் கோயிலில் உளவாரத் திருப்பணியும் நடைபெறும். இவற்றுக்கெல்லாம் இவருக்கு நேரம் எங்கிருந்து கிடைக்கிறதென்று ஊர் மக்கள் வியப்பதுண்டு.

ஊர்த்தொண்டில், பொதுத் தொண்டில், உரியவர்களை, அதிகாரிகளை, சந்திக்க வேண்டியவர்களை சலிக்காமல் மீண்டும் மீண்டும் சந்தித்து சாதிக்க வேண்டியவற்றை சாதித்து விடுவார். பல கட்டடங்களும் பயன் தரு பணிமனைகளும் இவருடைய சாதனைக்கு இன்றும் சான்று பகர்கின்றன.

இவருடைய காலத்தில்தான் புளியங்கூடல் கிராமம் யாழ்ப்பாணக்குடா நாட்டின் முன்மாதிரிக் கிராமமாக தெரிவு செய்யப்பட்டு பெரிய விழாவும் எடுக்கப்பட்டது. இதனை ஒட்டிய காலத்திலேயே இவர் கொழும்பு சென்று எமது கிராமம் பற்றி இலங்கை வானொலியில் மிகவும் அருமையான சொற்பொழிவொன்று ஆற்றியமை இன்றும் எனது நினைவில் பசுமையாகவுள்ளது.

திரு விசுவலிங்கம் ஆசிரியர் மேலும் பல்லாண்டு காலம் வாழ்ந்து தான் பிறந்த ஊருக்கும் சமூகத்துக்கும் சேவை செய்ய எல்லாம்வல்ல மகாமாரி அம்பாள் துணை புரிவாளாக!

செ. இரத்தினம்
நிதிப் பொறுப்பாளர்,
கல்லூர் பிரதேச சபை,
யாழ்ப்பாணம்.

## தனக்கென வாழாதவர்

கல்வியும், சைவமும், தமிழும் வளர்ந்த கிராமம் வேலணை மேற்கு. இங்குள்ள இரு வித்தியாசாலைகள் நடராசா வித்தியாசாலை, சைவப்பிரகாச வித்தியாசாலை ஆகியன இதற்கு அடித்தளமாக அமைந்திருந்தன.

வேலணை மேற்கும் புளியங்கூடல் கிராமமும் சங்கமிக்கும் கல்விக் கூடம் நடராசா வித்தியாசாலை ஆகும். இங்கு முப்பது வருடங்கள் கடமையாற்றி தமது எண்பதாவது அகவை நிறைவு செய்பவர் ஆசிரியமணி திரு நாகலிங்கம் விசுவலிங்கம் அவர்கள்.

அவர் தனக்கென வாழாப் பிறர்க்குரியாளர். கல்வி கற்பிப்பதில் மட்டுமன்றி இலங்கை சுதந்திரமடைந்த காலகட்டத்துக்கு முன்பே கிராம மக்களுக்கு சமூக விருத்தி, வருமான அதிகரிப்பு, புதிய செய்தொழில், சமய அறிவு ஆகிய துறைகளில் தொண்டாற்றியவர் இப்பெருமகன்.

இன்று பரவலாகப் பேசப்படும் கிராம மட்ட அபிவிருத்தியை அறுபது ஆண்டுகளுக்கு முன்பே செயலில் காட்டியவர் அவர். புளியங்கூடல் கிராமம் மட்டுமல்ல அதன் அயல் கிராமங்களும் ஆசிரியரின் முன் மாதிரியை பின்பற்றின. இத்தகைய பல்நோக்கு ஆசிரியர்களை இப்போது காண்பது அரிது. ஆசிரியமணி அவர்கள் நீண்டகாலம் வாழ ஆண்டவன் அவரை ஆசீர்வதிக்கட்டும்.

பேராசிரியர் செ. பாலச்சந்திரன்
தலைவர், புவியியற்றுறை,
யாழ். பல்கலைக்கழகம்
யாழ்ப்பாணம்.

## மாண்பு மிக்க பெரியார்

தீவுப் பகுதியில் புளியங்கூடல் அம்பாள் ஆலயம் ஒரு பிரசித்தி பெற்ற ஆலயமாகும். அவ்வாலயத்தில் எழுந்தருளியிருந்து அருள் பாலிக்கும் அம்பாளின் அனுக்கிரகத்தினால் அக் கிராம மக்கள் சீர் சிறப்புடன் வாழ்ந்து வருகின்றார்கள்.

அக் கிராமத்தில் ''கல் வீட்டுக் காரர்'' என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப்பட்ட தில்லையர் நாகலிங்கம் என்பவரின் மூத்த மகன்தான் இன்று 80 ஆம் அகவையை நிறைவு செய்யும் பெரியார் திரு. நா. விசுவலிங்கம் அவர்கள். இவர் தமது கிராமத்தில் 35 வருட காலம் சேவையாற்றினார். ஆசிரிய பதவியை ஒரு தொழிலாகக் கருதாது சேவையாக மதித்துப் பணி செய்து நூற்றுக்கணக்கான மாணவர்களைப் பயிற்றுவித்து நற் பிரஜைகளாக்கினார். சமுதாயப் பணியாகியவற்றிலும் ஈடுபட்டுழைத்தார். அவரது கிராமத்து சமய, சமூக மன்றங்கள் பலவற்றின் தலைமையை ஏற்று நல்ல பணிகள் பல செய்தார்.

நாரந்தனை கிராம சபைத் தலைவராகச் சில காலம் பதவி வகித்தது புளியங்கூடல் கிராமத்துக்கு மட்டுமல்ல, சபையின் ஏனைய கிராமங்களிலும் பல அபிவிருத்தி வேலைகள் செய்தார்

ஆசிரியரவர்கள் உயர்ந்த தோற்றமுடையவர். உருவத்தில் மட்டுமல்லாமல் உள்ளத்தால், ஒழுக்கத்தால், பண்பால், பணிவால், அன்பால், அடக்கத்தால், போக்கால் அவர் ஓர் உயர்ந்த மனிதர். அவர்களை அவரது கிராம மக்கள் மட்டுமன்றி அயல் கிராம மக்களும் அவரை அறிந்த ஏனையோரும் அவரை ஒரு மாண்புமிக்க பெரியாராக மதித்து நடக்கின்றனர்.

ஆசிரியரவர்கள் நோயற்று நீண்ட காலம் நலமுடன் வாழ அம்பாளின் அருளை வணங்கி வேண்டிக்கொள்கின்றோம்.

த. சண்முகலிங்கம்,
முன்னைநாள் நாரந்தனை-
கிராம சபைத் தலைவர்.

## கூடலூர் வளர்த்த உத்தமர்

இறை அருளாட்சி நிறைவால் செல்வங்கள் பலவும் தழைத்தோங்கும் தீவகத்தின் தலைப்பட்டினம் ஊர்காவற்றுறையின் சிறு கிராமம் புளியங்கூடல்.

இன்று சீரும் சிறப்பும் பெற்று பரந்து வாழும் இக் கிராம மக்கள் பலராலும் பாராட்டுப் பெற்று வரவேற்கப்படுகிறார்கள் என்றால் அதற்கு 50 ஆண்டுகளுக்கு முன்னால் வழிகாட்டிகளாக இருந்தவர்களுள் முதல்வர் பண்டிதர் நா. விசுவலிங்கம் ஆசிரியர் அவர்களின் தன்னலமற்ற சேவை ஆகும்.

அனைவரும் சமமென மதித்து சமூகத்துக்கு எது எப்போது முக்கியமென உணர்ந்து ஆய்ந்து அதற்கமைய அணுகி ஆற்றும் செயல்திறன் மிக்கவர்.

பதவியிலிருந்து பணியாற்ற வேண்டும், தொண்டு புரிய வேண்டும் என்பதை தவிர்த்து பதவியை பகிர்ந்தளித்து எந்நிலையிலும் சேவையாற்றலாம் என்பதை நிரூபித்தவர் ஆசிரியர் விசுவலிங்கம் அவர்களாவார்.

சமாதான நீதிவான் பதவியை, சமூக சேவையை ஊக்குவிக்கும் நோக்குடன் அப்பதவியை அனைவரும் மதித்திடும் அவ்வூர்ச் சேவையாளன் ஒருவருக்கு வழங்க வழி சமைத்த உத்தமர்.

இவர் சிந்தை போன்ற தூய உள்ளங்கள் தோன்ற வேண்டும். அதுவே எம் கைமாறு. இறைப் பார்த்து மகிழ்ந்து அவர் நலமே பல்லாண்டு வாழ வாழ்த்துவோமாக.

— பிரியன்.

புளியங்கூடல்.

பாரினில் பணிகள் பல செய்த வித்தகர்
**விசுவலிங்கம்**
பல்லாண்டு காலம் நலமுடன் வாழ
வாழ்த்துகின்றோம்

**வேணி களஞ்சியம்**
166, காங்கேசன் வீதி, யாழ்ப்பாணம்.

**நியோ கிறீம் ஹவுஸ்**
79, பாங்சல் வீதி, யாழ்ப்பாணம்.

பாரினில் பணிகள் பல செய்த வித்தகர்
**விசுவலிங்கம்**
பல்லாண்டு காலம் நலமுடன் வாழ
வாழ்த்துகின்றோம்

**லிங்கம் கூல்பார்**
வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம்.

**சேகர் மோட்டோர்ஸ்**
118, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**வல்லிபுரநாதன்**
பிரபல வர்த்தகர், புளியங்கூடல்.

[விளம்பர இல: சி/7573]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

*விற்பனைக்கு*

ராணி மார்க் இந்தியன் ஓடு, ரங்கூன் தேக்குத் தீராந்திகள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: திருமதி ப. கிருஷ்ணன், பழைய ஆஸ்பத்திரியடி, வட்டுக்கோட்டை. (7135)

மாம்பழம் சந்திக்கு அருகாமையில் நாவலர் வீதியில் 4 பரப்புக் காணி கிணற்றுப் பங்குடன் விற்பனைக்குண்டு. விவரம் பொ. அருளானந்தம், 110/2, கண்டி வீதி, யாழ்ப்பாணம். (யாழ்/ மாநகர சித்த வைத்தியசாலை முன்பாக) (29942)

அல்சேஷன் 6 மாதம் நிரம்பிய பெண் நாய் சுத்தமான சணன் மறிக்குட்டி, சுத்தமான கங்கேரி பாமா, 4 மாதம் நிரம்பிய பாமாஸ், சப்பாத்தி பன்டம், கறுப்பு பாமாஸ். 3 மாதம் நிரம்பிய பொலிஷ் விற்பனைக்குண்டு. 22 ராதா லேன், ஒட்டுமடம் றோட். (29927)

*இலவச திருமண சேவை*

27 வயது, உத்தராடம், செவ்வாய் 7, இரகபாவம் 34, நோர்வேயில் Engineer கடமை புரிபவருக்கு மணப்பெண் தேவை, Sponsor மூலம் அழைக்கலாம். மணமக்களுக்கு தொடர்பு: ஞாயிறு காலையில். விமலா இலவச திருமண சேவை, நாச்சிமார் கோயிலடி. (29897)

*காணி விற்பனைக்கு*

வைரெமு பலாலி வீதியில் 12 அடிப் பாதையுடன் "கோணாவளை" என்ற தோட்டக்காணி 12½ப் பரப்பு கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு. விவரங்களுக்கு: திருமதி பா. வன்னியசிங்கம், "வைரவர் கடாட்சம்" பலாலி வீதி, சரியப்புல வைரவர் ஆலயம் அருகில். திருநெல்வேலி. (29896)

*தேவை*

சாவகச்சேரி துர்க்காதேவி தேவஸ்தானத்திற்கு தோட்ட வேலை உட்பட பல வேலைகளும் செய்யக் கூடியவர் 25க்கும் 45க்கும் இடைப்பட்ட வயதில் உடன் தேவை. நேரில் வரவும். சம்பளம் நேரில் தீர்மானிக்கப்படும். தர்மகர்த்தா, துர்க்காதேவி தேவஸ்தானம், சாவகச்சேரி. (29924)

*பாலர் ஆசிரியராக*

பாலர் ஆசிரியர் பயிற்சி பெற தகைமை ஜி. சீ. ஈ. (O/L) தேவை. சனி, ஞாயிறு வகுப்பிற்கு வரமுடியாதோர் தபால் வழியிலும் பயிலலாம் ஆரம்பம்: 02-04-1994 பாலர் ஆசிரியர் சங்கம், உயர் கலைக் கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (7140)

## மூக்குக் கண்ணாடி அன்பளிப்பு

சாவகச்சேரி, மார்ச் 17

சாவகச்சேரி லியோ கழகத்தினர் சாவகச்சேரிப் பகுதியில் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள கண்பார்வை குறைந்த 30 பேருக்கு 10 ஆயிரம் ரூபா பெறுமதியான மூக்குக் கண்ணாடிகளை இலவசமாக வழங்கினர்.

சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் கடந்த 10ஆம் திகதி நடைபெற்ற இவ் விழாவில் சாவகச்சேரி நகரசபைச் செயலாளர் திரு. சி. நடராசா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு மூக்குக் கண்ணாடிகளை வழங்கினார். (க-31)

## அனைவருக்கும் தனித்தனியே சான்றிதழ்

அச்சுவேலி, மார்ச் 17

கோபபாய்க் கல்விக் கோட்ட உடற்பயிற்சிப் போட்டிகளில் வெற்றி பெற்ற - பங்குபற்றிய சக மாணவர்களுக்கும், உடற் பயிற்சி அணிகளைப் பயிற்றுவித்த ஆசிரியர்கள் - பாடசாலை அதிபர்களுக்கும் தனித்தனிச் சான்றிதழ் வழங்கப்படவுள்ளது (க-11)

# புலிகளுக்கு எதிரான கடுமையான போக்கு

## வெற்றிக்கு வழி வகுக்குமா?

கொழும்பு, மார்ச் 17

விடுதலைப்புலிகளுக்கு எதிரான தங்களின் கடுமையான போக்கு இம்மாதம் 24 ஆம் திகதி நடைபெறவிருக்கும் தென் மாகாண சபைத் தேர்தலில் ஆளும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு பெரும் வெற்றி வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கும் என்று அரசுத் தலைவர்கள் திடமாக நம்புகின்றனர்.

'சண்டே ஐலண்ட்' வார இதழில் ஷமிந்திரா பெரிடிவன்டோ இத்தகவலை வெளியிட்டுள்ளார் (இ-எ)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

### அமரர் கந்தர் செல்லத்துரை

(தரகர்)

தோற்றம்: 20 - 05 - 1924 மறைவு: 15 - 02 - 1994

எம்மை அன்போடும், பண்போடும் வளர்த்து நல்வழிகாட்டி வாழவைத்த தெய்வமே! உங்களது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் ஈமக்கிரியைகளின் போது கலந்து கொண்டவர்களுக்கும் அனுதாபச் செய்திகளை அனுப்பி வைத்தவர்களுக்கும் எமது மனப்பூர்வமான நன்றியறிதலை தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்பு மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

க. விமலாதேவி,
"ஸ்ரீ முருகன் இல்லம்"
இணுவில் மேற்கு,
இணுவில். (29928)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம் 1912 மறைவு 15 — 02 — 1994

திருவாட்டி

### சங்கரப்பிள்ளை பகவதிப்பிள்ளை

முன்னாள் பிரதம பொலிஸ் பரிசோதகர் அமரர் திருச்சிற்றம்பலம், சிவகுருநாதன், மனோன்மணி ஆகியோரின் தாயாராகிய காலஞ்சென்ற திருவாட்டி சங்கரப்பிள்ளை பகவதிப்பிள்ளை அவர்களின் இறுதிக் கிரியைகளில் பங்குகொண்டோர், அனுதாபச் செய்திகள் அனுப்பியோர் பல்வேறு வழிகளிலும் உதவியோர் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன், இன்று (17-03 1994) வியாழக்கிழமை நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும், ஆத்ம சாந்திப் பிரார்த்தனைகளிலும் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- குடும்பத்தினர்.

இல. 44/1, அம்பாள் வீதி,
நாயன்மார்கட்டு,
யாழ்ப்பாணம். [29925]

## 6 ஆவது ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 30 — 09 — 1917 மறைவு 17 — 03 — 1988

### அமரர் சின்னத்தம்பி தருமலிங்கம்

(இளைப்பாறிய பொலீஸ் சார்ஜன்ட்)

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்கே! ஆண்டுகள் ஆறு ஓடி மறைந்தாலும், நின் முகமும், நினைவுகளும், நெஞ்சில் நிலைத்து நின்று என்றென்றும் எம்மை வழி நடத்தும்.

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

வர்த்தலைவிளான்,
தெல்லிப்பளை. [29919]

# மேற்கு நாடுகளிலிருந்து அனுப்பப்படும் அகதிகளுக்கு விசேட சலுகை கிடையாது

## புனர்வாழ்வு அமைச்சு தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 17

மேற்கு நாடுகளில் இருந்து திருப்பி அனுப்பப்படவிருக்கும் அகதிகள் இங்கு ஏற்கனவே உள்ள அகதிகளைப் போலவே பராமரிக்கப்படுவர். எக்காரணம் கொண்டும் அவர்களுக்கு மேலதிக வசதிகளோ, சலுகைகளோ வழங்கப்பட மாட்டாது.

புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் செயலாளர் திரு. கிறிஸ்டி சில்வா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வடக்கு-கிழக்கில் வாழ்ந்து வரும் அகதிகள் நீண்டகாலமாக கஷ்டங்களை அனுபவிக்கின்றனர். அவர்களுக்கு நிவாரணம் அளிப்பது போலவே வெளிநாடுகளில் இருந்து திரும்பும் அகதிகளுக்கும் நிவாரணம் வழங்குவோம். புனர்வாழ்வு மற்றும் கடனுதவிகளிலும் எந்தவித பேதமும் இருக்காது - இவ்வாறு அவர் மேலும் கூறியுள்ளார்.

சுவிட்சர்லாந்து அரசாங்கம் இலங்கை அகதிகளை கட்டம் கட்டமாகத் திருப்பி அனுப்புவதற்கு முடிவு செய்திருப்பதும் —

சுவிட்சர்லாந்தைத் தொடர்ந்து ஏனைய ஐரோப்பிய நாடுகள் சிலவும் அகதிகளை அனுப்ப நடவடிக்கை எடுத்து வருவதும் தெரிந்தவையே.

# சந்திரிகாவுக்கு கொலை அச்சுறுத்தல்

## தேர்தல் பிரசாரம் ரத்து

கொழும்பு, மார்ச் 17

பொலீஸாரின் எச்சரிக்கையைத் தொடர்ந்து மேல் மாகாண முதலமைச்சர் சந்திரிகா குமாரணதுங்க தனது தென் மாகாண பிரசார நடவடிக்கைகளை ரத்துச் செய்துவிட்டு கொழும்பு திரும்பினார்.

தென்மாகாணத்தில் சந்திரிகாவுக்கு கொலைப் பயமுறுத்தல் இருப்பதாக பொலீஸார் எச்சரிக்கை செய்திருந்தனர்.

இதனைத் தொடர்ந்து கொழும்பு திரும்பிய சந்திரிகா தமது சொந்த பொலீஸ் பாதுகாப்பைப் பலப்படுத்திக் கொண்ட பின்னர், இவ்வாரம் மீண்டும் தென்மாகாணம் செல்வார் என்று சிரேஷ்ட சுதந்திரக்கட்சி அரசியல்வாதி ஒருவர் தெரிவித்தார். (இ-எ)

# மறுபிறவி எடுத்தாலும் ஐ.தே.க. தீர்வு காணாது

## முன்னாள் பிரிகேடியர் கூறுகிறார்

கொழும்பு, மார்ச் 17

இப்பிறவியில் அல்ல, மறுபிறவியிலும் கூட ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர்களினால் இனப்பிரச்சினைக்குத் தீர்வு கண்டுவிட முடியாது.

முன்னாள் இராணுவ பிரிகேடியர் ரஞ்சன் டி சில்வா முன்கண்டவாறு தெரிவித்தார்.

தென்மாகாண சபைத் தேர்தலில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் வேட்பாளராக இவர் போட்டியிடுகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

இராணுவத்தில் பணிபுரிந்த போது இவர் தென் பிராந்தியத்தின் கட்டளையிடும் அதிகாரியாக பணியாற்றி இருந்தார்.

வடக்கு - கிழக்கு பிரச்சினையை யுத்தம் மூலமோ அல்லது அரசியல் ரீதியாகவோ முடிவுக்குக் கொண்டு வந்து நாட்டின் ஒருமைப்பாட்டையும் தேசிய ஒற்றுமையை உறுதிப்படுத்துவது ஐக்கிய தேசியக் கட்சியினால் முடியவே முடியாத காரியமாகும் என்றும் அவர் தெரிவித்தார். (இ-எ-6)

## ஐ. தே. கவுக்கு ஆதரவு திரட்ட

# அமைச்சர்கள், பிரமுகர்கள் தென்மாகாணத்தில் முகாம்

கொழும்பு, மார்ச் 17

தென்மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் ஐ. தே. க. வேட்பாளர்களுக்கு ஆதரவு திரட்டுவதற்காக அங்கு சிரேஷ்ட அமைச்சர்கள், எம்.பிக்கள் மற்றும் பிரமுகர்கள் பலரும் முகாமிட்டுள்ளனர்.

காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை மாவட்டங்களில் அவர்கள் தங்கியிருந்து தமது கட்சியின் வெற்றிக்கு முழுஅளவிலான பிரசார வேலைகளில் ஈடுபட்டு வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஜனாதிபதி, பிரதமர் பங்குபற்றும் கூட்டங்களிலும் மற்றும் கிராமங்கள் தோறும் நடைபெறும் பிரசாரக் கூட்டங்களிலும் அவர்கள் முழுமூச்சாக கலந்து கொண்டு வருவதாக ஏஜென்சிச் செய்திகள் தகவல் தெரிவித்தன. (ஓ-6)

# தபாற் பகுதி பரீட்சைகள்

யாழ்ப்பாணம், மார்ச் 17

அஞ்சல் அதிபர்களுக்கான பொறுப்புப் பரீட்சை, நுண்ணாய்வு பரிசோதகர், அஞ்சல் கணக்கு பரிசோதகர் தெரிவுப் பரீட்சை, உதவி அஞ்சல் கணக்கு பரிசோதகர் தெரிவுக்கான பரீட்சை ஆகியவற்றுக்குத் தோற்றத் தகுதியுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இது தொடர்பான சுற்றுநிருபம் ஒன்று தமக்கு கிடைத்திருப்பதாக வடமாகாண பிரதி அஞ்சல் அதிபர் நாயகம் திரு எஸ். எம். சேதுகாவலர் அறிவித்துள்ளார்.

மேற்சொன்ன பரீட்சைகளில் அஞ்சல் அதிபர்களுக்கான பொறுப்புப் பரீட்சைக்கு விண்ணப்பிக்க வேண்டிய இறுதித்தினம் நாளை வெள்ளிக்கிழமை என்றும் —

மற்ற இரு பரீட்சைகளுக்கும் விண்ணப்பிக்க வேண்டிய இறுதித்தினம் எதிர்வரும் 21 ஆம் திகதி எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்படி பரீட்சைகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் தமது விண்ணப்பப்படிவங்களை தமக்கு அனுப்பி வைக்குமாறும் —

விண்ணப்பப் படிவங்கள் மற்றும் மேலதிக விவரங்கள் தேவைப்படுவோர் அலுவலகத்தில் தம்மை சந்திக்குமாறும் — வடமாகாண பிரதி அஞ்சல் அதிபர் நாயகம் எஸ். எம். சேதுகாவலர் கேட்டுள்ளார். (இ-5)

## வடக்கு - கிழக்கில்

# ஆசிரியருக்குப் பற்றாக்குறை மாகாண ஆளுநர் கவனத்துக்கு

கொழும்பு, மார்ச் 17

வடக்கு - கிழக்குப் பகுதியில் ஆசிரியர் பற்றாக்குறை இருப்பதாக மாநில ஆளுநர் லயனல் பெர்னாண்டோவின் கவனத்துக்கு, மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் வால்டர் நாணயக்கார கொண்டு வந்துள்ளார்.

குறிப்பாக இம் மாகாணத்தில் உள்ள கிராமப்புற பாடசாலைகளிலேயே ஆசிரியர் பற்றாக்குறை பெரும் அளவில் காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம் மாகாணத்தில் உள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை ஆயிரத்து 859 ஆகும்.

மாணவர் எண்ணிக்கை 6 லட்சத்து 49 ஆயிரத்து 480 ஆகும். இப் பாடசாலைகளில் பணிபுரிய 25 ஆயிரத்து 216 ஆசிரியர் தேவைப்படுகின்றனர். ஆனால் தற்போது 20 ஆயிரத்து 144 ஆசிரியர்களே பணிபுரிகின்றனர்.

5 ஆயிரத்து 72 ஆசிரியர்களுக்குப் பற்றாக்குறை நிலவுகிறது.

விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்களைப் போதிக்கும் ஆசிரியர்களுக்கே பற்றாக்குறை நிலவுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது,

மாநில ஆளுநரிடம் சமர்ப்பித்துள்ள அறிக்கையில் இவ் விவரங்களை மாகாணக் கல்வி அமைச்சுச் செயலாளர் தெரிவித்திருக்கிறார்.

# தமிழ்ப் பாட முதன்மை ஆசிரியர் பதவி வெற்றிடம்

யாழ்ப்பாணம், மார்ச் 17

சாவகச்சேரி கல்விக் கோட்டத்தில் தமிழ் பாடத்துக்கான முதன்மை ஆசிரியர் பதவி வெற்றிடமாக உள்ளது என்றும் —

யாழ். கல்வி வலயம் ஒன்றில் பணிபுரியும் தகுதியான விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை நாளை வெள்ளிக்கிழமைக்கு முன் தமது கோட்டக் கல்வி அலுவலகங்களுக்கு அனுப்புமாறும் யாழ். வலயம் ஒன்று கல்விப் பணிப்பாளர் செல்வி தி. பெரியதம்பி அறிவித்துள்ளார். (இ-5)

# அகதி முகாம் எரிந்து நாசம்

## மட்டக்களப்பில் சம்பவம்

மட்டக்களப்பு, காரைதீவில் உள்ள விபுலாநந்த மத்திய மகா வித்தியாலய வளவில் அமைந்திருந்த அகதி முகாம் கடந்த வெள்ளியன்று தீப்பிடித்து எரிந்து நாசமானதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நள்ளிரவு வேளை முகாமில் தீப்பிடித்துக் கொண்டது என்றும், அங்கு தங்கியிருந்த ஏழு குடும்பங்களைச் சேர்ந்த தமிழர்கள் தெய்வாதீனமாக உயிர்தப்பினர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

அவர்களின் உடமைகள், பாடசாலை உபகரணங்கள், உடுபுடைவைகள், அடையாள அட்டைகள், புத்தகங்கள் என்பன தீயில் எரிந்து நாசமாகின. (இ-5)

# மருந்தாளர் பற்றாக்குறை; புதியவர்களுக்கு பயிற்சி நெறி

யாழ்ப்பாணம், மார்ச் 17

வட பிராந்தியத்தில் மருந்தாளர்களுக்கு தற்போது நிலவும் பற்றாக்குறையை நீக்குவதற்கு வடபிராந்திய ஆங்கில மருந்து வர்த்தகர் சங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

வட பிராந்திய ஆங்கில மருந்து வர்த்தகர் சங்கத்தின் கீழ் உள்ள 89 ஆங்கில மருந்தகங்களிலும் பயிற்றப்பட்ட ஐந்து மருந்தாளர்களே தற்போது கடமையாற்றி வருகின்றனர். இதனால் பல மருந்தகங்களில் டாக்டர்களினால் எழுதிக்கொடுக்கப்படும் மருந்துகள் மாறிக்கொடுக்கப்பட்டு வருவதாக செய்திகள் வெளியாகியிருந்தன.

இந்த நிலையைக் கருத்திற் கொண்டு மருந்தாளர்களுக்கான 4 மாத இலவசப் பயிற்சி நெறி ஒன்று வட பிராந்திய ஆங்கில மருந்து வர்த்தகர் சங்கத்தினால் நடத்தப்பட்டு வருகிறது. யாழ். இந்துக் கல்லூரியில் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் தற்போது நடைபெற்று வரும் இம் முதல் கட்ட பயிற்சி நெறியில் 60 பேர் வரை பயிற்றுவிக்கப்படுகிறார்கள்.

கடந்த மாதம் 19ஆம் திகதி முதல் நடைபெற்று வரும் இப் பயிற்சி நெறிக்கான விரிவுரைகளை யாழ் பல்கலைக் கழக சிரேஷ்ட விரிவுரையாளர்களும் மூத்த மருந்தாளர்களும் வழங்கி வருகின்றனர்.

பயிற்சி முடிவில் நடத்தப்படும் பரீட்சையில் சித்தியடைவோருக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட உள்ளன.

இரண்டாவது கட்ட பயிற்சி நெறியும் இலவசமாக நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதாக வடபிராந்திய ஆங்கில மருந்து வர்த்தகர் சங்க செயலாளர் தெரிவித்தார். (ஓ-162)


## இன்று

## சுழிபுரம் - பறாளாய் முருகன் தேவஸ்தானத்தில்...

தமிழ் மக்களின் துன்பங்களை நீக்கி அபிலாஷைகளை நிறைவேற்றிட

## கந்தன் அருள் வேண்டி

# விடி விளக்குகள் - 108

இன்று (17-03 1994) முருகப்பெருமானின் இலட்சார்ச்சனை தினத்தில், கார்த்திகைத் திருவிழா முடிவுற்றதும் ஆறுமுகப் பெருமானுக்கு இரவு 7.00 மணியளவில் விடிவிளக்குகள் - 108 ஏற்றிவைக்கப்படும். இத்தினத்தில் அடியார்கள் அனைவரும் வருகை தந்து கந்தனின் அருளை வேண்டி ஏகும் வண்ணம் கேட்டுக் கொள்கின்றோம்.

குறிப்பு:

பறாளாய் ஈசுர விநாயகர் தேவஸ்தானத்தில் நேற்றைய பங்குனிச் சதுர்த்தி விழாவின்போது மேற்படி வேண்டுதலைப் பிரார்த்தனையாகக் கொண்டு பஞ்சமுக விநாயகப் பெருமானுக்கு விடி விளக்குகள் - 108 ஏற்றிவைக்கப்பட்டன.

சோழியூரான்:
பிறைகுடிக்குரு,
அமைப்பாளர்.

(சி-7565)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2, நாவலா வீதி,
யாழ்ப்பாணம்.

## புதியதா, பழையதா

இந்தியாவின் முன்னாள் வெளிவிவகாரச் செயலாளரும் இலங்கைக்கான முன்னாள் இந்தியத் தூதருமான ஜே. என். டிக்ஸிற் இலங்கையின் இனப்பிரச்சினை சம்பந்தமாகவும், அது குறித்த இந்தியாவின் நிலைப்பாடு சம்பந்தமாகவும் இம்மாதம் எட்டாம் திகதி வெளியான ''இந்து'' நாளிதழில் எழுதிய கட்டுரை எல்லோரது சவனத்தையும் ஈர்ப்பதாகும்.

1987இல் இலங்கை-இந்திய ஒப்பந்தம் உருவாகுவதில் டிக்ஸிற்றின் பணி குறிப்பிடத்தக்கதாக இருந்தது. ஒப்பந்த ஆக்கலிலும், செயற்படுத்தலிலும் அவர் பெரும்பாலும் சூத்திரதாரிகளில் ஒருவராகவே விளங்கினார்.

எல்லாவற்றுக்கும் மேலாக இந்திய அரசு விரும்பியபடி அந்த ஒப்பந்தத்தை தமிழர் மீது திணிப்பதில் தீவிரமாகவும், ''துடிப்பாக''வும், சடுத்தொனிக்காரராகவும் அவர் பணியாற்றியவர். இந்திய வெளிவிவகார அமைச்சுச் செயலாளர் பதவியிலிருந்து கடந்த ஜனவரி மாதத்தில்தான் அவர் ஓய்வு பெற்றார்.

இந்த வகையில், டிக்ஸிற்றின் கருத்துகள், அனேகமாக இந்திய அரசின் நிலைப்பாட்டைப் பிரதிபலிக்கின்றன எனக் கொள்ளலாம்.

இந்தியாவின் நிலைப்பாட்டில் குறிப்பிடத்தக்க புதிய அம்சம் என்னவெனில் விடுதலைப் புலிகளை ஓரங்கட்டி விட்டு இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்க்க முடியாது என்பதனை அது உணர்ந்துள்ளது என்பதாகும்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தினரும், தலைவர் பிரபாகரனும் தமிழ் மக்களின் விடுதலைக்காகப் போராடும் பிரதிநிதிகள் என்பதனையும்—

அவர்கள் அரசியல் செல்வாக்கும், இராணுவ ஆற்றலும் பெற்று வலிமையுடன் திகழ்கின்றனர் என்பதனையும் இந்தியா இப்போதாவது புரிந்திருக்கிறது.

இனப்பிரச்சினை விவகாரத்தில் ஸ்ரீலங்கா அரசு கடைப்பிடித்து வரும் இருபாதைக் கோட்பாடு — இராணுவ நடவடிக்கை மூலம் தமிழர் தரப்பை இணக்கம் ஒன்றுக்கு கொண்டுவரும் முறை— வெற்றி அளிக்காது என்பதனையும் டிக்ஸிற் கொழும்பு அரசுக்கு உணர்த்தியிருக்கிறார்.

அதேவேளை, இனப்பிரச்சினை தீர்க்கப்படாவிட்டால் அது இந்தியாவிலும், தென் ஆசியாவிலும் பாதிப்பை உண்டாக்கும் என்றும், அவற்றின் அக்கறைக்குரிய விடயமாகவே இருக்கும் என்பதையும் டிக்ஸிற் தமது கட்டுரை மூலம் கொழும்பு அரசுக்கு ஒருவித எச்சரிக்கை கலந்த அறிவுறுத்தலாகக் கொடுத்திருக்கிறார்.

பழைய அனுபவத்தினால் இனப்பிரச்சினையில் நேரடியாகத் தலையிடும் எண்ணத்தை இந்தியா சற்று மறந்துவிட்டதாகக் கொள்ளலாம். எனினும் அது தமிழர்களின் தனிநாட்டை வென்றெடுக்கும் அபிலாசைக்கு குந்தகமாக, முட்டுக்கட்டை போடும் போக்கை எப்போதும் மாற்றிக் கொள்ளாது என்பதனை டிக்ஸிற் ஆணித்தரமாக பின்வரும் வரிகளால் புலப்படுத்தி இருக்கிறார்:

மத அல்லது இன அடிப்படையில் ஏற்படும் ஒரு பிளவு இந்தியாவின் சொந்த நலன்களைப் பாதிப்பதாக அமையும். ஏனைய நாடுகளுடனான உறவுகளில் இந்த வாதத்தின் நியாயத் தன்மையை இந்தியா ஏற்றுக் கொண்டால், இந்தியக் குடியரசில் இதனைப் பயன்படுத்துவதில் கூட கேள்விக்கு இடமிருக்காது — என்று கூறியிருக்கிறார்.

எனவே தமிழர்களின் அபிலாசைகளுக்கான இந்தியாவினுடைய பொறுப்பு என்று அவர் கூறுவது தமிழர்களுடைய அபிலாசைகள் இந்தியாவுக்கு ஏற்புடைத்தனவையாக இருக்க வேண்டும் என்று அர்த்தப்படுகிறது. அதாவது வட்டம் சுற்றி வந்து மீண்டும் முந்திய இடத்தில் நிற்பதே இந்தியாவின் நிலைப்பாடும் புதிய அணுகுமுறையுமாக உள்ளது எனக் கொள்ளலாம்?

# ராஜீவின் காலம் முடியப் போகிறது!

## கொல்லப்படுவதற்கு 11 தினங்களுக்கு முன் சேஷனிடம் காஞ்சி முனிவர் தீர்க்க தரிசனம்

1991 ஆம் ஆண்டு மே மாதம் 10ஆம் திகதி......

இந்தியத் தலைமைத் தேர்தல் ஆணையாளர் டி. என். சேஷன் காஞ்சிபுரம் சென்று அங்குள்ள குடிலில் தங்கியிருந்த காஞ்சிப் பெரியவரைச் சந்தித்து பேசிக்கொண்டிருந்தார்.

பல்வேறு விஷயங்கள் பற்றி இருவரும் பேசிக்கொண்டிருந்த போது முன்னாள் பிர



ராஜீவ்

தமர் ராஜீவ்காந்தி பற்றி பிரஸ்தாபிக்கப்பட்டது.

திடீரென்று காஞ்சிப் பெரியவர், ''ராஜீவின் காலம் நெருங்கி விட்டது. அவரிடம் போய் இதனைத் தெரிவியுங்கள்''— என்று சேஷனிடம் கூறினார்.

அரசியல்வாதிகளுக்கு இன்று தினமும் அதிர்ச்சி வைத்தியம் செய்து வரும் சேஷன் — காஞ்சிப்பெரியவரின் எச்சரிக்கையைக் கேட்டு அன்று தாமே அதிர்ச்சி அடைந்து போனார்.

''சுவாமி, இதைத் தடுக்கவே வழி இல்லையா? இது நிச்சயம் நடக்கத்தான் போகின்றதா? — என்று சேஷன் திருப்பிக் கேட்டார்.

அதற்கு காஞ்சி முனிவர், சேஷனை குருவாயூர் சென்று அங்குள்ள ஜோதிடரான நம்பூதிரியைப் பார்க்கும் படி கூறினார்.

சேஷன் பதறிக்கொண்டு குருவாயூர் சென்றார். அங்குள்ள நம்பூதிரியைச் சந்தித்து காஞ்சி முனிவர் தம்மை அனுப்பிவைத்த காரணத்தைத் தெரியப்படுத்தினார்.

85 வயதான நம்பூதிரி பலவிதமான கணக்குகளைப் போட்டுப் பார்த்தார். வெகு நேரம் சென்றது.

பின்னர் நம்பூதிரி— ''மே 22ஆம் திகதியை ராஜீவ் காந்தி தாண்டமாட்டார். அவர் பெரிய வெடி விபத்தில் மரணமடைவார். இதை ராஜீவிடம் சொல்லுங்கள்''— என்று சேஷனிடம் கூறினார்.

''இதனைத் தவிர்க்க என்ன செய்யலாம்? சாந்தி கருமங்களை மேற்கொள்ளலாமா? — என்று சேஷன் நம்பூதிரியிடம் கேட்டார்.

''இது அகால மரணம் அல்ல; கட்டாயம் நடந்தே ஆகவேண்டிய கால மரணம் இது. இந்த மரணத்தைத் தவிர்க்கவே முடியாது'' — என்று நம்பூதிரி பதிலளித்தார்.

இதனைத் தொடர்ந்து — ராஜீவ்காந்தியை நேரில் சந்தித்து விஷயத்தைத் தெரிவிப்பது என்று சேஷன் முடிவு செய்தார்.

சேஷன் ராஜீவைச் சந்தித்தார்; காஞ்சி முனிவர், குருவாயூர் நம்பூதிரி ஆகியவர்களின் எச்சரிக்கையை அவரிடம் தெரிவித்தார்.

கிராமம் கிராமமாகச் சென்று தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடுவதை நிறுத்துங்கள் என்று ராஜீவை சேஷன் கேட்டுக் கொண்டார்.

அதற்கு ராஜீவோ — ''இது எப்படி சாத்தியம்? தீர்மானிக்கப்பட்டபடி பிரசாரம் செய்ய வேண்டாமா?'' என்று சேஷனிடம் திருப்பிக் கேட்டார்.

அப்போது சேஷன் ராஜீவிடம், ''நீங்கள் உயிருடன் குருவாயூர் செல்லாவிட்டால் மரணத்தைத் தவிர்க்க முடியாது என்று நம்பூதிரி என்னிடம் தெரிவித்திருக்கின்றார். ஆகவே நீங்கள் முதலில் குருவாயூர் சென்று நம்பூதிரியைச் சந்தியுங்கள்'' — என்று ஆலோசனை கூறினார்.

இப்படியாக இரண்டு நாட்களாக ராஜீவைச் சந்தித்து



காஞ்சி முனிவர்

சேஷன் கேட்டுக் கொண்டார். எனினும் ராஜீவ் தேர்தல் பிரசாரத்தைத் திட்டமிட்டபடி நடத்துவது என்பதில் பிடிவாதமாக இருந்தார்.

### பாக்ஸ் மூலம் டில்லிக்கு செய்தி

ராஜீவின் தென்னிந்தியப் பயணத்தை நிறுத்துவதிலும் குருவாயூர் சென்று நம்பூதிரியைச் சந்திக்க வைப்பதிலும்— தோல்விகண்ட சேஷன் அதுபற்றி காஞ்சி முனிவருக்கு அறிவித்தார்.

சேஷனின் தகவல் கிடைத்ததும் காஞ்சிப் பெரியவர், பாக்ஸ் மூலம் புதுடில்லியில் உள்ள ராஜீவின் அலுவலகத்துக்குச் செய்தி ஒன்றை அனுப்பி வைத்தார்

''மே 21க்கு முன்னர் நீங்கள் குருவாயூர் செல்ல வேண்டும். இதனைத் தங்களுக்கு அறிவிக்கும்படி பரமாச்சாரியார் எனக்குக் கட்டளையிட்டுள்ளார்''— இவ்வாறு ராஜீவுக்கு அனுப்பப்பட்ட பாக்ஸ் செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது.

மே 18 இல் அனுப்பப்பட்ட அச்செய்தியை ராஜீவ் காந்தியோ அவரது அலுவலகத்தில் இருந்தவர்களோ மே. 18, 19, 20, 21 ஆகிய திகதிகளில் காணவில்லை. பாக்ஸ் செய்தியை மே 23 ஆம் திகதி தான் அவர்கள் கண்டனர்.

ஆனால் ராஜீவ்காந்தி மே 21 இல் தமிழ்நாடு ஸ்ரீபெரும்புதூருக்குச் சென்று அங்கு குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்டார்.

எதனைத் தடுக்க சேஷன் முயற்சித்தாரோ அது நடந்து விட்டது.

அரசியலில் தன் பெயர் சம்பந்தப்படுவதை விரும்பாத காஞ்சி முனிவரின் விருப்பத்தை நிறைவேற்ற காஞ்சியில் இருந்து வந்த பாக்ஸ் செய்தி பற்றி வெளியே தெரிவிக்க வேண்டாம் என்று ராஜீவின் அலுவலக ஊழியர்களை சேஷன் கேட்டுக் கொண்டார்.

காஞ்சி முனிவர் அனுப்பி வைத்த அந்த பாக்ஸ் செய்தி ராஜீவ் காந்தியின் வீட்டில் இன்னமும் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

23-05-1991 இல் வெளியான 'டைம்ஸ் ஒப்' இந்தியா பத்திரிகையில் மட்டும் காஞ்சி முனிவரின் பாக்ஸ் செய்தி பற்றிய விவரம் வெளியிடப்பட்டிருந்தது.

---

புதுடில்லி ரமணகேந்திரத்தில் சமீபத்தில் நடந்த காந்திஜி நினைவுதினக் கூட்டத்தில் பிரதம பேச்சாளராகக் கலந்து கொண்டு பேசிய இந்திய தலைமைத் தேர்தல் ஆணையாளர் டி.என் சேஷன் இவ்விரங்களை எல்லாம் வெளியிட்டிருந்தார்.

# மாணவியை மானபங்கம் செய்த 15 வயது மாணவன்

## ரூ. 1 லட்சம் நட்ட ஈட்டுக்கு உத்தரவு

கொழும்பு, மார்ச் 17

கொழும்பு பாடசாலை மாணவி ஒருவரை மானபங்கம் செய்ததற்கு குற்றவாளியாகக் காணப்பட்ட மொரட்டுவை பாடசாலை ஒன்றில் படிக்கும் 15 வயது மாணவன் ஒருவனை சம்பந்தப்பட்ட மாணவிக்கு ஒரு லட்சம் ரூபா நட்டஈடாக வழங்கும்படி பாணந்துறை மேல் நீதிமன்ற நீதிபதி ரி. பி. வீரசூரியா உத்தரவிட்டார்.

அத்துடன், எதிரியான மாணவனுக்கு இருவருடக் கடுழியச் சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது.

நட்டஈட்டைச் செலுத்தத் தவறின் மேலும் 5 வருடக் கடுழியச் சிறைத் தண்டனை அனுபவிக்கும்படி மாணவனுக்கு உத்தரவிடப்பட்டது. (இ-எ 6)

# சனியன்று 3 பரீட்சைகள் யாழ்ப்பாணத்தில் நடக்கும்

யாழ்ப்பாணம், மார்ச் 17

அரசாங்க மற்றும் மாகாண அரச சேவையில் பொதுஎழுதுநர் சேவை வகுப்பு II ''அ'' பிரிவில் உள்ள உத்தியோகஸ்தர்களுக்கான வினைத் திறமைகாண் பரீட்சையும்—

கிராம உத்தியோகஸ்தர் சேவையின் II ஆம் தர உத்தியோகஸ்தர்களை I ஆம் தரத்துக்கு பதவி உயர்வு வழங்குவதற்கான போட்டிப் பரீட்சையும்—

கூட்டுறவு பரிசோதகர் சேவையின் II ஆவது ''ஆ'' தரத்தில் ஆட்களைத் சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சையும்—

எதிர்வரும் 19 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கின்றன.

இப்பரீட்சைகளுக்கான வினாத்தாள்கள் விமான மூலம் எடுத்து வரப்பட்டுள்ளதாகவும்—

பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் நேற்று தபாலில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் —

கல்வி அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (உ-3)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், மார்ச் 17

யாழ் பிரதேச செயலர் பிரிவு கழகங்களுக்கிடையிலான விளையாட்டு விழாவை ஒட்டி நடைபெறும் உதைபந்தாட்டப் போட்டிகளில் இன்று பாஷையூர் சென். அன்ரனீஸ் மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் கழக அணிகள் வருமாறு:-

★ பிற்பகல் 3.00 மணி:- சென். நிக்கிலஸ். வி. க. எதிர் கிறீன் பீல்ட் வி. க

★ 4.00 மணி – திருவள்ளுவர் வி. க. எதிர் குருநகர் தொடர்மாடி வி. க.

## பாடசாலைகளில்

நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலையின் மெய்வன்மைப் போட்டி இன்று வியாழன் பிற்பகல் 2 மணிக்கு வித்தியாசாலை மைதானத்தில் நடைபெறும். அதிபர் திரு. த. பஞ்சலிங்கம் போட்டிகளுக்கு தலைமை வகிப்பார். (இ-5)

★ ★ ★

அராலி மேற்கு வள்ளியம்மை ஞாபகார்த்த வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி பாடசாலை மைதானத்தில் இன்று பிற்பகல் 2 மணிக்கு அதிபர் திரு. ஆ. ஜெயராஜா தலைமையில் நடைபெறவுள்ளது. (இ-161)

★ ★ ★

இடைக்காடு மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இன்று பிற்பகல் 2 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி மைதானத்தில் அதிபர் திருமதி. வி. தெய்வேந்திரம் தலைமையில் நடைபெறும். (த)

★ ★ ★

மிருசுவில் விடத்தற்பளை கமலாசனி வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இன்று பிற்பகல் 2. 30 மணிக்கு அதிபர் திருமதி செ.பத்மநாதன் தலைமையில் வித்தியாலய மைதானத்தில் நடைபெறும். (த117)

## நாளை

சுழிபுரம் பறாளாய் தொண்டர் சபையினர் நடத்திய பஞ்சபுராண மனனப் போட்டியின் பரிசளிப்பு விழா நாளை பிற்பகல் 3 மணிக்கு பறாளாய் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயிலில் நடைபெறும்.

# திருமலை நகரப் பிரதேசம் சிங்களவர் மயமாகிறது!

## முஸ்லிம்கள் தற்போது 3ஆம் இடத்தில்

திருகோணமலை, மார்ச் 17

திருமலை நகர பிரதேசம் சிங்களவர் மயமாகிறது.

1990 ஆம் ஆண்டுக்கு முன்னர் இரண்டாவது பெரும்பான்மையாக இருந்த முஸ்லிம்கள் தற்போது மூன்றாவது இடத்துக்கு தள்ளப்பட்டு விட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

திட்டமிட்ட குடியேற்றமே இதற்குக் காரணம் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரமுகர் சட்டத்தரணி எம். எம். அபுல்கலாம் தெரிவித்துள்ளார். திருமலை நகர பிரதேசத்தில் 1990 ஆம் ஆண்டுக்கு முன்னர் 500க்கு குறைவாக இருந்த சிங்கள வாக்காளர் எண்ணிக்கை தற்சமயம் 5 ஆயிரமாக அதிகரித்து விட்டது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அதே சமயம் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தினால் திருமலையில் முஸ்லிம்கள் தமது காணிகளையும் இழந்துள்ளனர்.

பள்ளிவாசலுக்குச் சொந்தமான மையவாடிக்கான 205 பேர்ச்சஸ் நிலத்தில் தற்போது 45 பேர்ச்சஸ் நிலமே எஞ்சி இருக்கிறது.

மிகுதி நிலத்தில் சிங்களவர்கள் அத்துமீறிக் குடியேறி உள்ளனர்.

திருமலை நகர பிரதேசத்தில் உள்ள ஜமாலியா, லவ்லேன் பகுதிகளிலும் சிங்களவர்களின் அத்துமீறல் குடியேற்றங்கள் இடம்பெற்றன. இதனால் பாரம்பரியமாக இப்பகுதிகளில் வாழ்ந்து வந்த தமிழ் — முஸ்லிம் மக்கள் அகதிகளாகி உள்ளனர்.

தற்போதைய நிலை தொடர்ந்தால் திருமலை நகர எல்லைக்குள் உள்ள தமிழ் — முஸ்லிம் மக்கள் அனைவரும் அகதிகளாகி விடும் நிலை ஏற்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ)

# குண்டர் பற்றிய முறைப்பாடு பொலீஸார் அசிரத்தை!

தென்மாகாணத்தில் காணப்படும் குண்டர்களின் நடமாட்டம் பற்றி பொதுமக்கள் தெரிவிக்கும் முறைப்பாடுகள் குறித்து பொலீஸார் அசிரத்தை காட்டுகின்றனர் என்றும் —

காலி மாவட்டத்தில் இந்த நிலை தீவிரமாகக் காணப்படுவதாகவும் — அம்பாந்தோட்டை மாவட்ட சுதந்திரக் கட்சி எம்.பி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்திருக்கிறார்.

பொலீஸாரின் ஒத்துழைப்புடன்தான் குண்டர்கள் செயல்படுகின்றார்கள் என்ற அபிப்பிராயத்தை இது ஏற்படுத்தியிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

''குண்டர்களை நிராயுதபாணிகளாக்க வேண்டிய பொலீஸார் இப்படிச் செயல்படக்கூடாது. பொலீஸார் இதில் தவறும்பட்சத்தில் குண்டர்களை நிராயுதபாணிகளாக்கும் ஆற்றல் மக்களுக்கு உண்டு. அது மட்டுமல்ல மக்கள் தேர்தலைப் புறக்கணித்து விட்டு வேறு மாதிரியான நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு பொலீஸின் அசிரத்தை வழிவகுத்துவிடும் —

என்றும் அவர் கூறினார். (இ-எ-6)

# மனதை ஒருநிலைப்படுத்தி மாணவர் கற்க வேண்டும்

## நூல் நிலையத் திறப்பு விழாவில் உரை

மாணவர்கள் மனதை ஒருநிலைப்படுத்தி பாடங்களைக் கற்க வேண்டும். அப்பொழுது அவர்கள் வாழ்க்கையில் உயர்ந்த நிலையை அடைய முடியும்.

சாவகச்சேரி மகளிர் மகா வித்தியாலய சிறுவர் நூல் நிலையத்தைத் திறந்து வைத்து உரையாற்றிய பருத்தித்துறை இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரம தலைவர் சுவாமி சித்ரூபானந்தா இவ்வாறு கூறினார்.

நூல் நிலையத் திறப்பு விழா கடந்த மாதம் 23 ஆம் திகதி அதிபர் செல்வி இ. வீரசிங்கம் தலைமையில் நடைபெற்றது.

சுவாமி சித்ரூபானந்தா மேலும் கூறியதாவது:

இன்றைய மாணவர்கள் பாடசாலை, ரியூசன் என மாறிமாறி அலைகின்றனர். அவர்களுக்கு நல்ல நூல்கள், சஞ்சிகைகளை வாசிக்க நேரம் கிடைப்பதில்லை.

கற்பது மட்டும் அல்ல, சிந்திப்பதும் அவசியம். பல விஞ்ஞானிகள். அறிஞர்களின் ஆக்கபூர்வமான சிந்தனையே பல கண்டுபிடிப்புகளுக்குக் காரணமாக அமைந்தது —என்றார்.

சாவகச்சேரி நகரசபை செயலாளர் திரு. சி. நடராசா, பழைய மாணவி திருமதி இராஜசங்கரி, திருமதி சாந்தி அருந்தவபாலன் ஆகியோர் உட்படப் பலர் உரையாற்றினார்கள். (த117)

# தபாலகங்களை திருத்த நிதி ஒதுக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 17

குடாநாட்டில் உள்ள நான்கு தபாலகங்களைத் திருத்துவதற்கு புனருத்தாரண திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு, கொழும்புக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

வடமாகாண பிரதி அஞ்சல் அதிபர் நாயகம் திரு. எஸ். எம். சேதுகாவலர் மேற்படி திட்டத்தை அனுப்பி, அதற்கான நிதியைக் கோரியுள்ளார்.

இப் புனரமைப்புத் திட்டத்தின் கீழ் பருத்தித்துறை தபாலகத்திற்கென 20 லட்சம் ரூபாவும், சாவகச்சேரி தபாலகத்திற்கு ஆறரை லட்சம் ரூபாவும், சுண்டிக்குளி தபாலகத்திற்கு 4 லட்சம் ரூபாவும், சுழிபுரம் தபாலகத்துக்கு 4 லட்சத்து 25 ஆயிரம் ரூபாவும் நிதி கோரப்பட்டுள்ளது. (ஒ-162)

# திருக்கேதீஸ்வரத்தில் பூசை நடத்துவிக்கும் ராணுவத்தினர்!

கொழும்பு, மார்ச் 17

பாடல்பெற்ற தலமான திருக்கேதீஸ்வரம் ஆலயத்தில் ஞாயிறு தோறும் பூசகர் ஒருவரைக் கூட்டிச் சென்று பூசைகளை இராணுவத்தினர் நடத்தி வருகின்றனர்.

இத்தகவலை சென்னையில் இருந்து வெளியாகும் புரொன்ட்லைன் ஆங்கில சஞ்சிகை வெளியிட்டிருக்கின்றது.

கொழும்பில் உள்ள புரொன்ட்லைன் செய்தியாளர் வி. ஜெயந்த் சமீபத்தில் தலைமன்னார் சென்று அங்கு தாம் பார்த்தவற்றை 'முகாமில் இருந்து முகாமுக்கு' என்ற தலைப்பிலான கட்டுரையில் எழுதியிருக்கிறார். அக்கட்டுரையிலேயே இத்தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

''மன்னாரில் உள்ள திருக்கேதீச்சர ஆலயம் காலத்தின் அறிகுறியாக காட்சியளிக்கின்றது.

''எள்ளாடி இராணுவமுகாமிற்கு அருகில் இந்த ஆலயத்தின் ஒரு பகுதியை படையினர் புதுப்பித்துள்ளனர்.

''பூஜை வழிபாடுகளுக்காக இந்த ஆலயம் தினமும் திறக்கப்படுவதில்லை.

''ஞாயிற்றுக்கிழமைகளில் மட்டுமே இராணுவம் இந்த ஆலயத்தை திறக்கிறது தாம் கூட்டிச் செல்லும் பூசகர் ஒருவரைக் கொண்டு அன்றைய தினம் பூஜையையும் இராணுவம் நடத்தி வருகின்றது'' — என்று புரொன்ட்லைன் கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது (இ-எ)

## அடுத்த பொதுத் தேர்தலில்

# உபசபாநாயகர் காமினி போட்டியிட மாட்டார்!

கொழும்பு, மார்ச் 17

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் உப சபாநாயகர் காமினி பொன்சேகா போட்டியிடமாட்டார் என்று கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

தென் மாகாணசபைத் தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் ஆளும் கட்சிக்கு ஆதரவாக அதன் மாத்தறை மாவட்ட எம்.பியான காமினி பொன்சேகா கலந்து கொள்ளாதிருப்பதைத் தொடர்ந்தே இப்பேச்சு அடிபடுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சில ஆண்டுகளுக்கு முன்னர் தாம் சமர்ப்பித்த வளர்ச்சித் திட்டங்கள் இன்னும் அமுல் நடத்தப்படாத நிலையில் தாம் எப்படி ஆளும் கட்சியின் பிரசாரங்களில் கலந்துகொள்வது என்று திரு. காமினி பொன்சேகா ஐ. தே க. தலைமைத்துவத்தைக் கேட்டிருப்பதாகவும் ''சண்டே ஐலண்ட்'' தகவல் வெளியிட்டிருக்கிறது. (உ-எ)

## மட்டக்களப்பு வாவிக் கரையில் ஒதுங்கிய சடலம்

கொழும்பு, மார்ச் 17

மட்டக்களப்பு நகரில் உள்ள லொயிட் அவனியூ வாவிக் கரையோரமாக ஆண் ஒருவரின் சடலம் கடந்த புதன் கிழமை கண்டு எடுக்கப்பட்டுள்ளது.

கதிரவேல் திருமால் (வயது 48) என்பவரது சடலமே அது என அடையாளம் காணப்பட்டது. (இ-5)

பொன்னான பொழுதை வதிவிடக் காணியில்
போக்கியே வாழ்ந்தோரை போற்றுதல் நலமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்

### திருமதி. சிவகுரு அன்னப்பிள்ளை

பெரியவிளானை பிறப்பிடமாகக் கொண்ட திருமதி சிவகுரு அன்னப்பிள்ளை 16-3-94 ஆம் திகதி புதன் கிழமை காலமானார். இவர் காலஞ்சென்ற மு. சிவகுருவின் மனைவியும் துரைராசா, காலஞ்சென்ற நடராசா (ஆனிப்பலவை இயக்குநர் சுன்னாகம்), தம்பிராசா, நவரத்தினம், காலஞ்சென்ற முத்துராசா, ராசரத்தினம், ரவமணி, சரஸ்வதி, செல்வராசா ஆகியோரின் அன்புத்தாயாரும் நாகம்மா, காலஞ்சென்ற மங்களாம்பிகை, தர்மதேவி, இராசமணி, ஜெயமணி, சரஸ்வதி, நல்லதம்பி (இ.போ.ச. முகாமையாளர் கோண்டாவில்), ஆனந்தராசா (தொ.நு.உ. மின் யாழ் மாநகர சபை), உமாதேவி ஆகியோரின் மாமியாருமாவார். அன்னாரின் பூதவுடல் இன்று 17-3-94 வியாழக்கிழமை 9-00 மணிக்கு நவாலி முதலியார் மகேசன் இல்லத்தில் இருந்து சமக்கிரியைக்காக நவாலி வழுக்கையாறு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்

தகவல்
சி. செல்வராஜா

நவாலி வடக்கு,
மானிப்பாய்.
(29949)

### கந்தையா சின்னத்தம்பி

(கொல்லங்கலட்டி உடையார்)

(இளைப்பாறிய சிறாப்பர் நில அளவை இலாகா)

கொல்லங்கலட்டியை பிறப்பிடமாகக் கொண்டவரும் இடம்பெயர்ந்து தற்போது, அளவெட்டி பெருமாக்கடவைப் பிள்ளையார் கோவில் வடக்கு வீதியில் வசித்தவருமாகிய கந்தையா சின்னத்தம்பி 16-3-1994 இல் காலமாகிவிட்டார்.

அன்னார் சௌபாக்கியவதியின் அன்புக் கணவரும், சிவலோகநாதன், கதிர்காமநாதன் (Seylan Bank-Colombo), சத்தியலோகநாதன் ஆகியோரின் அன்புத் தந்தையும், திலகவதி, சற்குணநாயகி ஆகியோரின் அன்பு மாமனும், கார்த்திகாலஷ்மி, சீதாலஷ்மி ஆகியோரின் அன்புப் பேரனும், கோகுலனின் பூட்டனுமாவார்.

அன்னாரின் சமக்கிரியை அளவெட்டி பெருமாக்கடவை பிள்ளையார் கோவில் வீதியிலுள்ள இல்லத்தில் 17-3-1994 வியாழன் காலை 8 மணிக்கு நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சி. சத்தியலோகநாதன் (மகன்)
(பவனம்)
க. சிவநாதன் (பேறாமகன்)
(தம்பா)

குமாரகிரி
பெருமாக்கடவை வீதி,
அளவெட்டி தெற்கு.
(29947)

### திருமதி அருளானந்தம் செல்வரத்தினம்

சங்கரத்தையைப் பிறப்பிடமாகக் கொண்ட நடராசா அருளானந்தம் (பெரியதம்பி) அவர்களின் மனைவி செல்வரத்தினம் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற குகதாஸ், சிவதாஸ் (சுவிஸ்), பத்மினி ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவஞானம், பஞ்சரத்தினம், காலஞ்சென்ற வைத்திலிங்கம் ஆகியோரின் சகோதரியும், சிவராசா (சின்னத்தம்பி), திருமதி தம்பிராசா நாகேஸ்வரியின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வழுக்கையாறு மயானத்துக்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ந. அருளானந்தம்
(கணவன்)

சங்கரத்தை,
வட்டுக்கோட்டை.
(29954)

### Mary Roseammah Richards

திருமதி மேரி றோசம்மா றிச்சேட்ஸ் 15-3-94 அன்று காலமானார்.

அன்னார் திரு. விக்டர் கருணைராஜன் றிச்சேட்ஸ், திரு. கிறிஸ்டி றிச்சேட்ஸ் ஆகியோரின் அருமைத் தாயாரும் ஆவார்.

நல்லடக்க ஆராதனை இன்று (17-3-94) பி.ப. 3 00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று வட்டுக்கோட்டை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்:
திருமதி
நேசமணி கனகரட்ணம்

சிட்டிபம்
சித்தங்கேணி.
(7142)

### DR. G. GURUNATHAN

(பிரதான வைத்திய நிபுணரும், நிர்வாக இயக்குநரும் ஜனவசம அட்டன் Hatton)

கொட்டடியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், அட்டனில் ஜனவசமவில் கடமையாற்றியவருமான வைத்திய நிபுணர் கு. குருநாதன் சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்தியர் குருசாமி, நாகரெத்தினம் தம்பதிகளின் மகனும், கமலநாயகியின் அன்புக் கணவரும், கோண்டாவிலைச் சேர்ந்த சந்திரசேகரம் தம்பதிகளின் மருமகனும், சுந்தரலெட்சுமி, பரமேஸ்வரி, மங்களேஸ்வரி, சிவசங்கரன் ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற பொன்னம்பலம், காலஞ்சென்ற குலசேகரம், வெள்ளியம்பலம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 16 ஆம் திகதி அட்டனில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மங்களேஸ்வரி வெள்ளியம்பலம்
(சகோதரி)

வட்டு கிழக்கு,
வட்டுக்கோட்டை.
(7145)

# இணைப்பை இரத்துச் செய்வதானால் முஸ்லிம்களுக்கு தனி மாகாண சபை

## ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் வற்புறுத்து

கொழும்பு, மார்ச் 17

வடக்கு கிழக்கு மாகாணங்களின் இணைப்பை ரத்துச் செய்யவேண்டுமானால், முஸ்லிம்களுக்கு என தனியான மாகாணசபை உருவாக்கப்பட வேண்டும்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஜனாப் ரஷிப் ஹக்கீம் முன் கண்டவாறு தெரிவித்தார்.

வடக்கு கிழக்கு இணைப்புக்கு முன்னர் கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்கள் 33 சதவீதமாக இருந்தனர் இன்று பல காரணங்களுக்காக முஸ்லிம்களின் பலம் 13 சதவீதமாகக் குறைந்து விட்டது. ஆகவே இரு மாகாணங்களின் இணைப்பு ரத்துச் செய்யப்படவேண்டுமானால் முஸ்லிம்களுக்குத் தனி மாகாணசபை உருவாக்கப்படவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

சர்வசன வாக்கெடுப்பு விஷயத்தில் கிழக்கிலங்கை முஸ்லிம்கள் இரண்டும் கெட்டான் நிலையில் உள்ளனர். இணைப்புக்கு ஆதரவாக வாக்களித்தால் சிங்கள மக்கள் குறை காண்பர். இணைப்புக்கு எதிராக வாக்களித்தால் தமிழர்கள் குறை காண்பர் என்றும் அவர் கூறினார்.

இலங்கையும் இந்தியாவும் செய்து கொண்ட உடன்பாட்டுக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கும் சம்பந்தமே கிடையாது.

முஸ்லிம்களுடன் கலந்தாலோசிக்காமல் செய்யப்பட்ட உடன்பாடு அது.

ஆகவே சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்படுவதை முஸ்லிம் காங்கிரஸ் எதிர்க்கின்றது. ஆகவே இந்த விஷயத்தில் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியை அரசாங்கம் சம்பந்தப்படுத்தக் கூடாது என்றும் அவர் கூறினார். (இ-எ)

# 5 வருட ஆசிரிய சேவையை முடித்தால் பல்கலை. அனுமதி

ஐந்து வருடகாலம் ஆசிரியர்களாகப் பணிபுரிந்தவர்களை, பட்டதாரி கற்கைநெறி பயில பல்கலைக்கழகங்களில் அனுமதிப்பதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.

பொதுக்கலைத் தேர்வு (G.A.Q), பொது விஞ்ஞானத் தேர்வு (G.S.Q) பரீட்சைகளில் வெளிவாரி மாணவர்களாகச் சித்தி அடைந்தவர்களே பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்படுவர்.

1993—94 கல்வி ஆண்டில் முதலாவது தொகுதி ஆசிரியர்களைப் பல்கலைக்கழகங்களில் அனுமதிப்பதற்கான நடவடிக்கைகளை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு மேற்கொண்டு வருகிறது.

பொதுக் கலைத் தேர்வு பொது விஞ்ஞானத் தேர்வுகளில் குறிப்பிட்ட பாடங்களைக் கற்றுத் தேறியவர்களே, பட்டதாரி கற்கைநெறிக்கு அனுமதிக்கப்படுவர்.

தெரிவு செய்யப்படும் ஆசிரியர்களின் பெயர்ப்பட்டியல் கல்வி அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்படும் என்று பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை—

பல்கலைக்கழகத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் அங்கு சேர்ந்து கல்வி பயிலும் காலம் வரை—அவர்களுக்கான வகுப்புகள் தொடங்கும் வரை — அவர்களுக்குத் தற்காலிக ஆசிரிய நியமனங்களை வழங்குவதற்கான ஒரு திட்டமும் வகுக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக விவகார அமைச்சும், கல்வி அமைச்சும் இணைந்து இத்திட்டத்தை வகுத்துள்ளன.

ஆங்கிலம், விஞ்ஞானம் அல்லது கணிதத்தில் ஜி.சி.ஈ. உயர்தர தகைமை பெற்றவர்களுக்கு இந்த நியமனம் வழங்கப்படும். இவர்கள் தத்தமது வசிப்பிடத்துக்கு அருகில் உள்ள பாடசாலைகளில் கல்வி புகட்ட நியமிக்கப்படுவர். இவர்களுக்கு மாதம் 1,500 ரூபா அலவன்ஸ் வழங்கப்படும். (அ-த)

# அ.தி.மு.க. அரசை கலைக்க ஆளுநரிடம் எதிர்க்கட்சி மனு

சென்னை, மார்ச் 17

ஊழல் குற்றச்சாட்டுக்கள்—மற்றும் தமிழகத்தில் விடுதலைப் புலிகளின் நடமாட்டம் அதிகரித்திருப்பது — ஆகியவை காரணமாக அ.தி.மு.க. அரசைக் கலைக்கும்படி மத்திய அரசுக்குச் சிபார்சு செய்யுமாறு ஆறு எதிர்க்கட்சிகள் தமிழக ஆளுநரிடம் மனு சமர்ப்பித்துள்ளன.

தமிழகத்தை அ.தி.மு.க. அரசிடமிருந்தும் விடுதலைப் புலிகளிடம் இருந்தும் காப்பாற்ற வேண்டும் என்றும் மனுவில் கோரப்பட்டுள்ளது.

இந்த மனுவில் 37 ஊழல் குற்றச்சாட்டுகள் கூறப்பட்டுள்ளன.

இம் மனுவை காங்கிரஸ் உட்பட ஆறு எதிர்க்கட்சிகளின் தலைவர்களும் அ.தி.மு.கவில் இருந்து வெளியேற்றப்பட்ட ஆறு முன்னாள் அமைச்சர்களும் நேற்று மாலை ஊர்வலமாகச் சென்று சமர்ப்பித்தனர்.

இன்ஸ்பெக்டர் ஜெனரல் தரத்தில் உள்ள ஓர் அதிகாரி விடுதலைப் புலிகளுக்கு உதவுவதாகவும் —

விடுதலைப் புலிகளின் புலனாய்வுத் தலைவர் பொட்டம்மானும் உயர் தலைவர் பேபி சுப்பிரமணியமும் சென்னையில் இருப்பதாக கூறப்படுவதாகவும் இம் மனுவில் தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் தமிழக பொலீஸாருக்கு தெரியும் என்றும்—

அதனைத் தடுத்து நிறுத்த மாநில அரசு எவ்வித நடவடிக்கையையும் எடுக்கவில்லை என்றும் மனுவில் கூறப்பட்டுள்ளது. (இ-எ 6)

# ஜனாதிபதி டி.பியின் பேச்சு குழப்பத்தை ஏற்படுத்துகிறது

## கொழும்பு சஞ்சிகை வர்ணனை

இனப்பிரச்சினை தொடர்பான ஜனாதிபதி டி.பி. விஜேதுங்காவின் பேச்சுக்கள், அப்பிரச்சினைக்கான தீர்வு குறித்து சிந்திப்பவர்களிடையே குழப்பமான நிலையை ஏற்படுத்துவதாக உள்ளது.

அத்துடன் சமரச முயற்சிகளில் ஈடுபட்டுள்ளவர்களின் கருத்துக்களை அரசு கவனத்தில் எடுப்பதில்லை.

அரசியல் செய்தியாளர் ஒருவர் கொழும்பில் இருந்து வெளியாகும் சஞ்சிகை ஒன்றில் இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

ஆளுங்கட்சியின் சிரேஷ்ட அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர் ஆகியோர் வடக்கு கிழக்குப் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டியதன் அவசியத்தை நன்கு உணர்ந்துள்ளனர்.

இதேவேளை —

மற்றொரு செய்தியாளர் கொழும்பு நாளிதழ் ஒன்றில் கருத்துத் தெரிக்கையில்—

தமிழ் மக்களும் சிங்களவர்களும் சமாதானத்தையே கோருகின்றனர். அதற்கான சூழ்நிலை உள்ளபோது அதனை பயன்படுத்த அரசின் திறப்பது அரசு சமாதானத் தீர்வில் அக்கறை இல்லாமல் உள்ளது என்பதையே காட்டுகின்றது.

வடபகுதிக்கு நல்லெண்ண விஜயத்தை மேற்கொண்ட அனைவரும் சமாதானத்துக்கான சூழ்நிலைகள் அங்கு நிலவுவதை சுட்டிக் காட்டுகின்ற போதும் நல்லெண்ணத்தை பயன்படுத்தி கொள்ள அரசு அக்கறை காட்டவில்லை என்று தெரிவித்துள்ளார்.

### கபில்தேவிற்கு எம்.பி. பதவி

புதுடில்லி, மார்ச் 17

டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் 432 விக்கெட்டுகளை வீழ்த்தி உலகசாதனை படைத்த இந்திய கிரிக்கெட் வீரர் கபில்தேவிற்கு எம்.பி. பதவி வழங்கவேண்டும் என்று ஜனதாதள உறுப்பினர் சங்கர் தயாள் சிங்கும் மற்றும் சில உறுப்பினர்களும் டில்லி இராஜ்ய சபையில் வலியுறுத்தினர்.

# ஜனாதிபதி டி. பியின் கூற்று தேர்தலின் பின்னர் மாறும்

## ராஜாங்க அமைச்சர் தேவராஜ் கூறுகிறார்

ஜனாதிபதி விஜேதுங்க சமர்ப்பிக்கவிருக்கும் அரசமைப்புத் திருத்தங்கள் தொடர்பான யோசனைகளுக்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் நேரடியாக இணக்கம் தெரிவிக்காது

ராஜாங்க அமைச்சர் பி.பி. தேவராஜ் இவ்வாறு பி.பி.ஸி சிங்கள சேவைக்குத் தெரிவித்தார்.

வடக்கில் நிலவுவது இனப்பிரச்சினை அல்ல; பயங்கரவாதப் பிரச்சினையே என்று ஜனாதிபதி கூறுவது தேர்தல் காலத்தில் சாதாரணமாகக் கூறும் மாறுபட்ட கருத்தாகும். ஆகவே ஜனாதிபதியின் இக்கூற்றைத் தவறாக எடுத்துக் கொள்ளலாகாது. தேர்தல் முடிந்ததும் கால நிலை மாற்றம் அடைவது போல அரசியலிலும் மாற்றங்கள் ஏற்பட வாய்ப்பு உண்டு — என்றும் ராஜாங்க அமைச்சர் தெரிவித்தார். (உ-எ-6)

# அரச ஊழியர் சேவை நோக்குடன் கடமையைச் செய்ய வேண்டும்

## சேவை நலன் பாராட்டு விழாவில் உரை

யாழ்ப்பாணம், மார்ச் 17

"அரசாங்க ஊழியர் தமது கடமையை சேவை என்ற பெருநோக்குடன் செய்ய வேண்டும். மக்களுக்கு உதவி புரிவதில் அயராது உழைக்க வேண்டும். அப்பொழுது அவர்கள் மக்களின் நம்பிக்கையையும், அன்பையும் பெறுவார்கள்."

சாவகச்சேரி நகரசபை செயலாளராகப் பணியாற்றி ஓய்வுபெற்ற திரு. த. நவரத்தினராசா சேவையைப் பாராட்டி அண்மையில் யாழ்ப்பாணம் [illegible] சார மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பேசிய யாழ். மாநகரசபை பதில் ஆணையாளர் திரு. நா. நவரத்தினராசா இவ்வாறு கூறினார்.

பாராட்டுக் கூட்டம் உள்ளூராட்சி எழுதுவினைஞர் சங்கத் தலைவர் திரு. அ. பாலசுந்தரம் தலைமையில் நடைபெற்றது.

பதில் ஆணையாளர் நவரத்தினராசா மேலும் பேசுகையில் கூறியதாவது:

நகரசபை செயலாளர் நவரத்தினராசா எழுதுவினைஞர் சங்கத்தில் செயலாளராக [illegible] பிளர்களின் நன்மைக்காக உழைத்தார். உள்ளூராட்சி சேவையில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியில் முக்கிய பங்கெடுத்துக் கொண்டார்.

இவரது சேவைக் காலத்தில் சாவகச்சேரி நகரம் பல வழிகளிலும் சிறப்புற்று முன்னேற்றம் அடைந்துள்ளது என்றார் அவர்.

யாழ். மாநகர பதில் ஆணையாளர் திரு. நவரத்தினராசாவுக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார். உள்ளூராட்சி சபைகளைச் சேர்ந்த சங்க அங்கத்தவர்கள் பலர் அவரின் சேவையைப் பாராட்டி உரை நிகழ்த்தினார்கள். (க-31)

வடக்கில் ■ ■

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டிருப்பதாக மற்றொரு தகவல் தெரிவிக்கிறது.

சர்வமத சமாதானக் குழுவின் கூட்டம் இவ்வாரம் நடைபெறும் போது அதில் கலந்து கொள்ளவிருக்கும் பௌத்த குருமாருக்கும் விளக்கப்படவிருப்பதாகவும்— தெரிவிக்கப்பட்டது. (அ-3)

மட்டக்களப்பு ■ ■

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யும், தமது வலைக்குள் வீழ்த்த ஐ.தே. கவினர் முயற்சித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ)

பேரா ■ ■

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

துடன் தங்களது அரசியல் அந்தஸ்தை சுதந்திரமாக நிர்ணயிப்பதற்கான தமிழர்களின் உரிமையை அங்கீகரிக்கவும் வேண்டும்.

இதேவேளை —

வடக்கு-கிழக்கு மாகாணங்களை உள்ளடக்கிய சமஷ்டி அரசு ஒன்றை அமைக்க வேண்டும் என்ற பிரேரணை ஒன்றை ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழு கூட்டத்தில் கொண்டு வருவதற்கான முயற்சிகள் நடைபெற்றதும் குறிப்பிடத்தக்கது

ஈழத் தமிழ்க் குழுக்களின் இந்த முயற்சிக்கு மேற்கு நாடுகளைச் சேர்ந்த அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்கள் சிலவும், சமயக் குழுக்கள் சிலவும் ஆதரவு தெரிவித்திருந்தன

ஆளுநர் ■ ■

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டு வந்தார்;

ஆனால் திரு. சென்னாரெட்டி நேற்று நிகழ்த்திய உரையில் 'புரட்சித் தலைவி' என்ற சொற்றொடர் இடம்பெறவில்லை.

மேலும் — கடந்த டிசம்பரில் சட்டசபையில் நிறைவேற்றப்பட்ட படி முதலமைச்சரே மாநிலப் பல்கலைக்கழகங்கள் அனைத்துக்கும் ஆளுநருக்கு பதிலாக, வேந்தராக நியமிக்கப்படுவார் என்ற முக்கிய மாற்றமும் நேற்றைய ஆளுநர் உரையில் இடம்பெறவில்லை.

மேற்கூறிய மாற்றத்துக்கு ஆளுநர் சென்னாரெட்டி இணக்கம் தெரிவிக்காததே இதற்குக் காரணமாகும்.

ஆளுநர் சட்டமன்ற உரை நிகழ்த்த வந்தபோது வழக்கம் போல் அவரை வரவேற்க முதல்வர் ஜெயலலிதா மன்ற முகப்புக்குச் செல்லவில்லை.

ஆளுநரை சபாநாயகர் வரவேற்று மன்றத்துக்குள் அழைத்துச் சென்றார். சபையின் முதல்வரிசையில் இருக்கையில் அமர்ந்திருந்த ஜெயலலிதாவைத் தவிர ஏனையோர் ஆளுநரை முகமன் கூறி வரவேற்றனர்.

உரையை முடித்துக் கொண்ட பின்னர் ஆளுநரை சபாநாயகரோ, முதலமைச்சரோ மற்றும் அமைச்சர்களோ விடைகூறி அனுப்பவில்லை —இவ்வாறு பி.பி.ஸி தெரிவித்தது. (இ-எ)


## எமது புதிய வெளியீடு

R. B. சௌத்திரியின்
சரத்குமார், சுகன்யா நடித்த
O கேப்டன் O
சுப்பலோ வீடியோ ஓடியோ சென்ரர்
198/5, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(சி/7574)


## மரண அறிவித்தல்

### அப்புத்துரை தம்பிஜயா

(இளைப்பாறிய ஊழியர் தொலைத்தொடர்புத் திணைக்களம்)

அரியாலையைச் சேர்ந்த அப்புத்துரை தம்பிஜயா (16-03-94) அன்று காலமாகிவிட்டார்.

இவர் புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், சிற்றம்பலம், சறோஜினி சுந்தரலிங்கம் (மாநகரசபை, யாழ்ப்பாணம்), சந்திராதேவி வரதராசா, ஜெகசோதி, வசந்தா, ரகுநாத் ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி பாக்கியம் அழகக்கோனின் சகோதரரும், புவனேஸ்வரி, த. சுந்தரலிங்கம் (காங்கேசன் சீமெந்து தொழிற்சாலை), தனபாலசம்பந்தர், புவனேஸ்வரி, ம. கனகலிங்கம், தேவராசா, சுவேந்தினி ஆகியோரின் மாமனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (17-03-94) பிற்பகல் 4 00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இருந்து சம[illegible] சித்துப்பாத்தி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
த. சுந்தரலிங்கம்
(மருமகன்)

இல. 150, [illegible],
அரியாலை,
யாழ்ப்பாணம்.
(29955)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, [illegible] இல் உள்ள அச்சகத்தில் 17-03-1994 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org